வட அமெரிக்கத் தமிழ்ச்சங்கப் பேரவை
Federation of Tamil Sangams North America
SINCE 1988

கோடை மலர்

# அருவி

திருவள்ளுவர் ஆண்டு 2054 / வைகாசி / ஜூன் 2025



# FITEN

FeTNA International Tamil Entrepreneur Network

# FITEN – RALEIGH 2025

## FETNA 38'TH TAMIL CONVENTION



## DR. VEERAPPAN SUBRAMANIAN

**CEO & CHAIRMAN – SOMERSET PHARMA, LLC**

**KEYNOTE SPEAKER**

**Date:** July 3, 2025 | Thursday **Time:** 8:30 AM (EST) onwards

**Venue:** Raleigh Convention Center, 500 S Salisbury St, Raleigh, NC 27601

**To Register:** https://fetna-convention.org

www.fiten.org | www.fetna-convention.org company/fiten fetnaconvention

# அருவி

## உள்ளே...


| | |
|---|---|
| பேரவைத் தலைவர் மடல் | 5 |
| பேரவைச் செயலாளர் மடல் | 6 |
| ஆசிரியர் மடல் | 7 |
| வாழ்த்து மடல் | 10 |
| தமிழ்ச் சங்கக் காணுலா | 12 |
| பேரவைத் திருவிழா பயன்கள் | 14 |
| மீண்டும் உதித்தது வானவில் | 16 |
| எழிலும் இளா அத்தை வீடும் – 'பற' | 18 |
| சிங்கா என்னும் சிங்கக்குட்டி – 'நட' | 20 |
| விழா எடுப்போம்! | 21 |
| உடல் எடையை குறைக்கச் சில யோசனைகள் | 23 |
| மதுரை நாகி கவிதை | 26 |
| நேசிக்கிறோம் ஆனால் நெருக்குகிறோம் பாசத்தோடு அழுத்தமும் தரும் புதிய தலைமுறை பெற்றோர்! | 28 |
| ஹூஸ்டன் தமிழ்ப்பள்ளிகள் | 30 |
| மில்வாக்கி மாநகர தமிழ்ச் சங்கம் | 32 |
| டென்னசி தமிழ்ச்சங்கத்தின் சித்திரைத் திருவிழா | 33 |
| சியாட்டல் தமிழ்ச் சங்க நிகழ்ச்சிகள் – 2025 | 34 |
| தன்னிகரில்லாத் தமிழ் | 35 |
| சிந்தைக்கு மட்டுமில்லாமல் வயிற்றுக்கும் உணவளித்த அன்னையர் தினம் | 36 |
| நட்பின் நிழலில் ஒரு வாழ்வு | 38 |
| யூட்டா தமிழ்ச் சங்கம் மற்றும் யூட்டா தமிழ் அகாடமி தமிழ்த்திருநாள் பொங்கல் விழா 2025 | 40 |
| விஸ்கான்சின் தமிழ்சங்கம் | 42 |
| கொஞ்சம் பொறு.. பூக்களும் பூக்கும்! | 44 |
| ஆற்றங்கரை அரசமரம் | 46 |
| உலக மகளிர் நாள் | 49 |
| வாசிக்கலாம் வாங்க ஓராண்டு நிறைவு விழா | 51 |
| உலகத் தாய்மொழி நாள் மற்றும் தமிழ்த் திருவிழா | 52 |

# ஆசிரியர் குழு



**திருமலைஞானம் சிவஞானம்**
ஆசிரியர்
ரோசெஸ்டர் ஹில்ஸ், மிச்சிகன்



**மலர் நடராஜா**
இணை ஆசிரியர்
வடகொரலைனா



**Dr.வைத்திநாதன் செல்வராஜ்**
இணை ஆசிரியர்
மேடிசன், விஸ்கான்சின்



**ஜான்சிராணி பிரபாகரன்**
பேரவை இணைச்செயலாளர்
விஸ்கான்சின்



**பிளாரன்ஸ் கிறிஸ்டோ**
துணை ஆசிரியர்
அட்லாண்டா



**சுபா காரைக்குடி**
துணை ஆசிரியர்
நியூஜெர்சி



**நாகராஜன் ராஜேந்திரன்**
துணை ஆசிரியர்
மேசன், ஓஹியோ



**இந்துமதி ஜெயபால்**
துணை ஆசிரியர்
டப்ளின்



**கனகப்பிரியா சங்கர்ராஜ்**
துணை ஆசிரியர்
ஃபிரிஸ்கோ, டெக்சாஸ்



**வீரா கந்தசாமி**
துணை ஆசிரியர்
நியூயார்க்



**அருள்மொழி**
துணை ஆசிரியர்
சியாட்டல், வாஷிங்டன்



**விஜயகுமார் ரங்கசாமி**
துணை ஆசிரியர்
ஸ்பிரிங் ஹில்ஸ், டென்னஸி



**சுப்ரமணிய பெருமாள் திருநாவுக்கரசு**
துணை ஆசிரியர்
சால்ட் லேக் சிட்டி, UTAH

# தலைவர் மடல்

அன்புத் தமிழார்வலர்களுக்கு,

வணக்கம். சித்திரைத் திருநாள் கொண்டாட்டங்களை முடித்து விட்டு, கோடை காலத்தினை எதிர்கொள்ள இருக்கின்றோம். அனைவருக்கும் வாழ்த்துகள். எதிர்வரும் ஜூலை 3 – 5, நம் பேரவையின் 38ஆவது ஆண்டுவிழா, கேரோலைனா தமிழ்ச்சங்கத்துடன் இணைந்து இராலே நகரில், தவத்திரு குன்றக்குடி அடிகளார், தோழர் இரா.நல்லகண்ணு ஆகியோரது நூற்றாண்டு விழாவாகவும் நாம் கொண்டாட இருக்கின்றோம். கடந்த மூன்று மாதகாலத்தில் நிறைய பணிகள் பேரவையில் இடம் பெற்றிருக்கின்றன. தமிழுக்காகவும் தமிழர்களுக்காகவும் உழைத்துக் கொண்டிருக்கின்ற பேரவைத் தன்னார்த் தொண்டர்களுக்கு எம் மனமார்ந்த நன்றிகள் உரித்தாகுக!

பேரவைவிழாப் பணிகள் நிமித்தம், டெக்சாஸ் டாலாஸ், நியூஜெர்சி, நியூயார்க், ஹாரிஸ்பர்க், சான்பிராசிஸ்கோ வளைகுடாப்பகுதி, சிகாகோ, டெலாவர் பெருநிலம், வாசிங்டன் வட்டாரம் முதலான இடங்களுக்கும் சென்று, ஆர்வலர்களைச் சந்தித்து ஆதரவுகளைத் திரட்டியுள்ளோம். அந்தந்த ஊர்களில் ஏற்பாடுகளைச் செய்து, தமிழ்ச்சொந்தங்களைச் சந்திக்கும் வாய்ப்பினை அமைத்துக் கொடுத்த தமிழ்ச்சங்க நிர்வாகிகளுக்கும் நன்றிகளை உரித்தாக்கிக் கொள்கின்றேன்.

பேரவை விழாவில், தொழில்முனைவோர் மாநாடு, விளையாட்டுத் திருவிழா, திரைப்படவிழா, வட அமெரிக்க வாகை சூடி போட்டிகள், மரபுக்கலைகள் சங்கமம், இலக்கிய நிகழ்வுகள், கலை நிகழ்ச்சிகள், மரபுமருத்துவம், தமிழ்க்கல்வி, மணமாலை என, வாழ்வியலுக்குத் தேவையான நிறைய மேம்பாட்டு விழுமியங்கள் இருக்கும்படியாக வடிவமைக்கப்பட்டு உள்ளன. தொய்வில்லாமல் உழைத்துக் கொண்டிருக்கின்ற, பேரவைக் குழுக்கள், பேரவைவிழாக் குழுக்களைச் சார்ந்த நண்பர்களை எல்லாம் சந்தித்து நட்பு பாராட்டவும் காத்திருக்கின்றேன். பெருந்திரளாக வந்து பேரவை விழாவினைச் சிறப்பிக்க வேண்டுகின்றேன்



தமிழால் இணைவோம் தமிழராய் வாழ்வோம்! நன்றி!!

அன்புடன்,

**விஜய் மணிவேல்,**

**தலைவர், வட அமெரிக்கத் தமிழ்ச்சங்கப் பேரவை.**

# பேரவைச் செயலாளர் மடல்

அன்புத் தமிழ் நெஞ்சங்களுக்கு,

வணக்கமும் வாழ்த்துகளும் உரித்தாகுக. சித்திரைத் திருநாள் விழாக்களை கொண்டாடி வசந்தத்தினுள் நுழைந்துள்ளோம். இசைத்தமிழ் கூட்டங்கள், இலக்கியக் கூட்டங்கள், திருக்குறள் அமர்வுகள், சங்கத்தமிழ் அமர்வுகள், தாய்மொழி நாள் கூட்டம், சட்டம் குடிவரவுக்குழுவும் TamilER குழுவும் இணைந்து நடத்திய குடிவரவு தொடர்பான கூட்டங்கள் எனப் பலவும் பேரவையில் கடந்த காலாண்டு காலத்தில் இடம் பெற்றுள்ளன. காலாண்டுக் கூட்டங்களையும் நடத்தி வருகின்றோம். கலந்து கொள்வோருக்கு நன்றி. இன்னும் பெருமளவில் வந்திருந்து ஆதரவினை நல்குமாறு வேண்டிக் கொள்கின்றேன்.

2025 – 2027 காலகட்டத்துக்கான தமிழ்ச்சங்கங்களின் உறுப்பியத்தைப் புதுப்பிக்கும் பணிகளும், கூடுதலான சங்கங்களை உறுப்புச் சங்கங்களாக ஆக்கும் பணிகளும் குறித்த காலத்துக்குள் முடிக்கப்பட்டுள்ளன. ஒரு சில சங்கங்கள் மட்டும் தணிக்கைப் பணிகள் முடிவடையக் காத்திருக்கின்றன. 71+ தமிழ்ச்சங்கங்கள், 250+ கூடுதலான பொதுக்குழு உறுப்பினர்களென பேரவை பரந்து விரிவடைந்திருக்கின்றது. உறுப்பினர் சேர்க்கைக்குழுவுக்குப் பாராட்டுகளும் வாழ்த்துகளும் உரித்தாகுக.

செயற்குழு, பொதுக்குழுக்கூட்ட அறிக்கைகளை, காலத்தாழ்ச்சி எதுவுமின்றி உடனுக்குடனே பொதுவில் பகிரப்படுவதை வாடிக்கையாகக் கொண்டு, உண்மை, வெளிப்படை, நம்பகம் என்பதைச் செயற்குழு கட்டமைத்து வருவது நாமனைவரும் அறிந்ததே. கூடுதலாக, பேரவைத் தகவல்கள், அறிவிப்புகள், செய்திமடல்கள் முதலானவையும் மின்னஞ்சல்கள், சமூகவலைதளக் கட்டமைப்புகளில் வெளியிடப்பட்டு வருகின்றன. அவற்றையெல்லாம் நீங்களும், தத்தம் சங்கத்தார், நண்பர்களிடம் கொண்டு சேர்த்திடவும் கேட்டுக் கொள்கின்றோம்.

பேரவை விழாப் பணிகள் சிறப்பாக இடம் பெற்று வருகின்றன. பேரவை விழாவில் கலந்து கொள்ள உடனே பதிவு செய்து கொள்ளுங்கள். தமிழால் இணைவோம் தமிழராய் வாழ்வோம்! விழாவில் சந்திப்போம், நன்றி!

தமிழ்ப்பற்றுடன்,



**முனைவர் கபிலன் வெள்ளையா,**

**செயலாளர், வட அமெரிக்கத் தமிழ்ச்சங்கப்**



## அன்பிற்கினிய வட அமெரிக்கத் தமிழ் உறவுகளே,

நமது தமிழ் உறவுகள் அனைவரும் 38-வது பேரவையின் தமிழ்த் திருவிழாவிற்கு தயாராகிக் கொண்டிருக்கிறார்கள் என்பதை அறிவோம்.வட அமெரிக்க முழுவதும் விரவி இருக்கும் நமது உறவுகள் அனைவரையும் வடகொரலைனா ரேலே நகரில் சந்திக்கப்போகிறோம் என்ற பேரார்வமும், பெருமகிழ்ச்சியும் அனைவரிடமும் இருக்கும். ஆம்,நாம் அவ்வழியில் வந்தவர்கள் என்பதை குறுந்தொகை பாடலில் அறியலாம்.

**"பேர்ஊர் கொண்ட ஆர்கலி விழவின்**
**செல்வாம் செல்வாம் என்றி என்று, அன்று இவன்**
**நல்லோர் நல்ல பலவால் தில்ல"** (குறும்.223:1-3)

விழா நடைபெறும் இடத்திற்குச் சென்றால், அவ்விடத்தில் வாழுகின்ற நல்லோர்களைப் பார்க்க முடியும். அவர்களிடமிருந்து நற்சொற்களைப் பெற்று நம்முடைய வாழ்வு சிறக்க உதவும் என்கிறாள் தலைவி.நம் தமிழ் உறவுகள் அனைவரும் ரேலே நகரில் நடைபெறும் தமிழ்த் திருவிழாவிற்கு வருகை தந்து நம் சுற்றங்களுடன் கலந்து உறவாடி தமிழாய்ந்த தமிழ் அறிஞர்களின் கருத்துகளை பெற்று நம் தமிழறிவை மேம்படுத்திக் கொள்வதுடன் அடுத்த தலைமுறைக்கு தமிழைக் கொண்டு செல்வதற்கு அணியமாவோம்.

நாம் தொலைவில் இருந்தே பார்த்து பிரமித்துக் கொண்டிருக்கும் எத்தனையோ ஆளுமைகளை மிக எளிதாக நேரில் சந்தித்து உரையாடுவதற்கு வாய்ப்பை ஏற்படுத்தி கொடுப்பது நம் பேரவையின் தமிழ்த் திருவிழா என்றால் மிகையல்ல.

பேரவையின் 38-வது தமிழ்த் திருவிழாவில் நம்மை மகிழ்விக்க எத்தனையோ நிகழ்ச்சிகள் இருக்கிறது.ஆம், கண்கவர் கலை நிகழ்ச்சிகள் தொடங்கி இலக்கிய நிகழ்வுகள்,குழந்தைகளுக்கான போட்டிகள் என்று மூன்று நாட்களும் திருவிழாதான்.நம்ம ஊர் திருவிழாக்களில் மக்கள் பெருந்திரளை

பார்க்கும் போது நாம் அடையும் பரவசத்தை விட புலம்பெயர்ந்த இடத்தில் கூடும் போது பன்மடங்கு பரவசமடைவோம். எனவே நிகழ்ச்சிகளை கண்டு ரசிக்க வடகொரலைனா ரேலே நகரில் ஒன்று கூடுவோம் என்று அருவி இதழ்குழுவின் சார்பில் வரவேற்பு மடல் விடுக்கிறோம்.

புலம்பெயர்ந்து வாழும் நமக்கெல்லாம் புதிய உறவுகள் கிடைக்கும் இடமாக இருப்பது நமது பேரவை தமிழ்த் திருவிழா என்றால் மிகையல்ல. ஆம், பேரவை உறுப்பினர்கள் பலர் கடந்த வருடம் சான் ஆன்டோனியோ நகரில் நடந்த பேரவைத் திருவிழாவில் எனக்கு கிடைத்த உறவுகள் தான். பேரவைத் திருவிழாவில் எதிர்பாராததை எதிர்பாருங்கள். தொலைதூரத்தில் நாம் கேள்விப்பட்ட எத்தனையோ ஆளுமைகள் எதிர்பாராத விதத்தில் அறிமுகமாகி இன்ப அதிர்ச்சி கொடுப்பார்கள்.

கடந்த வருடம் நிகழ்வு அரங்கத்தில் இருந்து உணவகத்திற்கு செல்வதற்காக பேருந்துக்கு வரிசையில் காத்திருந்தபோது அங்கே நால்வர் கடந்த 25 வருடங்களாக பேரவைத் திருவிழாவிற்கு வருவதையும், திருவிழாவில் நடந்த சம்பவங்களையும், பேரவையில் தாங்கள் பணியாற்றிய அனுபவங்களையும் ஒருவருக்கொருவர் பகிர்ந்து கொண்டிருக்கும் பொழுது அருகிலேயே அமைதியாக கேட்டுக் கொண்டிருந்தேன். நான் அமைதியாக அவர்கள் பேசுவதை உற்று நோக்குவதை பார்த்தவர்கள் " நீங்க எந்த தமிழ்ச் சங்கம் என்று கேட்டு அறிந்து கொண்டு பிறகு தங்களை அறிமுகப்படுத்தும் போது எனக்கு சற்று ஆச்சரியமாக இருந்தது". எந்த பலனையும்எதிர்பாராமல் வெறுமனே தமிழ், தமிழர்கள் என்ற ஒற்றைப் பற்றினை கொண்டு புலம்பெயர்ந்த இடத்தில் தொடர்ந்து பேரவையின் நலனுக்கு குரல் கொடுத்து வருபவர்கள்தான் அவர்கள். இது போன்ற பல சம்பவங்கள் பேரவைத் திருவிழாவில் எதிர்பாராத வண்ணம் நடக்கும். எனவே அமெரிக்கா முழுவதும் பரவி இருக்கும் தமிழ் உறவுகள் அனைவரும் வடகொரலைனா ரேலே நகரை நோக்கி பயணப்படுவோம், வாருங்கள் உறவுகளே.

கோடை மலருக்கு படைப்புகளை தந்த அனைத்து படைப்பாளிகளுக்கும், அட்டைப்பட ஓவியங்களை தந்த நம்ம ஊர் ஓவியர்களுக்கும், குறிப்பாக மருத்துவம் மற்றும் அறிவியல் சார்ந்த படைப்புகளை தந்த படைப்பாளிகளுக்கும் அருவி இதழின் சார்பாக வாழ்த்துகளையும், நெஞ்சார்ந்த நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

மீண்டும் அடுத்த இதழில் சந்திப்போம், அருவி குறித்த பின்னூட்டங்களை aruvimalar@fetna.org என்ற மின்னஞ்சல் முகவரியில் பகிர்ந்து கொள்ளுங்கள்.

**திருமலைஞானம் சிவஞானம்**

**ரோசெஸ்டர் ஹில்ஸ், தமிழ்ச் சங்கம் மிச்சிகன்.**


FITEN
FeTNA International Tamil Entrepreneur Network
FeIFF
FeTNA INTERNATIONAL FILM FESTIVAL
FiST
வட அமெரிக்கத் தமிழ்ச்சங்கப்
பேரவையின்
38ஆவது தமிழ் விழா
JULY 03, 04 & 05 - 2025
Thursday, Friday & Saturday
@ Raleigh Convention Center
500 South Salisbury Street,
Raleigh, NC 27601
2025
சிறப்பு
நிகழ்ச்சிகள்
தொழில் முனைவோர் மாநாடு
சர்வதேச திரைப்பட விழா
சர்வதேச விளையாட்டு போட்டிகள்
தமிழிசை | துள்ளிசை
இன்னிசை இரவு
மக்களிசை
கலை இலக்கியப் போட்டிகள்
நாடகம் | நாட்டியம்
கவியரங்கம்
மரபுக்கலைகள்
அறிவரங்கம்
விவாதமேடை
நவீன நிகழ்ச்சிகள்
இலக்கிய விநாடி வினா
திரைக்கலைஞர் நேரம்
அறிவியல் தேனீ
சங்கங்களின் சங்கமம்
நகைச்சுவை நேரம்
மணமாலை
இன்னும் பல...
www.fetna-convention.org
To Register:



# வாழ்த்து மடல்

2024-2025 கல்வியாண்டில் தமிழ் இறுதி வகுப்பு பட்டயம் பெற்ற ஐவருக்கு கற்பித்த ஆசிரியை ஒருவரின் "உயிர் ஒற்றிய வாழ்த்து மடல்" கடந்த தமிழர் திருநாள் அவையில் வாசிக்கப்பட்டது

அதரம் இரண்டும் குவியும் முன்னே - அதரம் இரண்டும் குவியும் முன்னே

அகரம் அதனை கொஞ்சிபயில தமிழ் பள்ளி தேடி வந்த நீவிர் தானோ!

ஆலம்போல் விழுதூன்றி வேர் பரப்பிய, நற்றமிழ் பட்டயம் பெற நற்றமிழ் பட்டயம் பெற நிற்கின்றீர் இச்சபையில் காலம் தான் உருண்டோடி விட்டதுவோ!

இட்லியோடு சட்னி உண்டதனை வாரம் தவறாமல்

இன்முகத்தோடு கூறிய சின்னஞ்சிறுவீர்கள் உங்கள் மைல்கல் பயணத்தை

ஈடில்லா ஆனந்தம் பேருவுவகையோடு ஈடில்லா ஆனந்தம் பேருவுவகையோடு பார்க்கின்றேன்- இந்த ஆசிரிய அத்தைதான்

உலகமெல்லாம் வீட்டங்கிய பெருந்தொற்று பேராபத்து காலத்திலும் பெருந்தொற்று பேராபத்து காலத்திலும்

உற்சாகமாக இணையவழி தமிழ் கல்விதனை தொடர்ந்து - எதிர் தகவமைந்தீரே உற்சாகமாக இணையவழி தமிழ் கல்விதனை தொடர்ந்து - எதிர் தகவமைந்தீரே

ஊடகங்கள் வழி நிகழ்ச்சிகள் பல செவ்வனவே செய்தீரே ஊடகங்கள் வழி நிகழ்ச்சிகள் பல செவ்வனவே செய்தீரே

எந்தன் கவி வகுப்புகளை கலகப்பாய் வைத்தீரே

பத்து வரி கவியொன்றை சமை என்றால் பத்து வரி கவியொன்றை சமை என்றால்

பெயர்ச்சொல் வினைசொல் மட்டுமே கொண்டு

நீ இங்கு வந்தால்

நான் அங்கு போவேன்

என் தம்பியும் வருவான் என்பான் ஒருவன்

நீ இங்கு வந்தால்

நான் அங்கு போவேன்

என் தம்பியும் வருவான் – என்பான் ஒருவன்

ஏனடா இந்த சோதனை என் தமிழுக்கு பத்து வரியல்லவா கேட்டேன் என்றால் அத்தை–இதிலொரு பெரும் திருக்கணித சூட்சுமமே இருக்கிறது!

நாங்கள் மூவரும் அவ்விருவரையும் பார்த்து

இதைத்தான் பாடிடுவோம் –அவ்விருவர் எம்மூவரையும் பார்த்து அதனையே திருப்பி பாடுவார்கள்–

ஆக உங்களுக்கு பதினைந்து வரிகள்

என கை கொட்டி சிறுத்திடுவர்!

என்ன தான் செய்வது இந்த ஆசிரிய அத்தையும் – ஒருவேளை, "இன்று பொய் நாளை வா" போல் பெருங்கவிதை படைத்திடுவாரோ என்று வியந்தமர்வேன்!

ஐவகை நிலமேறி

ஐம்பென்றும் காப்பியங்கள் பயிர்ச்சிபெற்று

ஐயன் வள்ளுவன் மொழி பற்றி

ஐவகை நிலமேறி

ஐம்பென்றும் காப்பியங்கள் பயிரிச்சிபெற்று

ஐயன் வள்ளுவன் மொழி பற்றி

ஒயிலாட்டம், தப்பாட்டம் தானாடி, இசை தமிழின் வில்லுப்பாட்டு தான் பாடி,

நற்றமிழ் கவியரங்கம், நாடகம் படைத்து–

முத்தமிழ் அனைத்தையும் அழகுற சுவைத்தீரே

ஒயிலாட்டம், தப்பாட்டம் தானாடி, இசை தமிழிலின் வில்லுப்பாட்டு தான் பாடி, நற்றமிழ் கவியரங்கம், நாடகம் படைத்து–முத்தமிழ் அனைத்தையும் அழகுற சுவைத்தீரே இன்று வரை!–உங்களனைவரையும்

ஒருகுலம் தமிழ்க்குலம் எனவே ஓங்கி உலகமெல்லாம் நற்றமிழ் வேர்தன்னை பரப்பி ஔவையின் மொழி ஒழுகிடவே வாழ்த்துகிறோம்

உங்களனைவரையும் ஒருகுலம் தமிழ்க்குலம் எனவே ஓங்கி உலகமெல்லாம் நற்றமிழ் வேர்தன்னை பரப்பி ஔவையின் மொழி ஒழுகிடவே வாழ்த்துகிறோம்

எடுத்த காரியம் அனைத்திலும் பெருவெற்றி பெற்று, பெற்றோரும், மற்றோரும் பெரு உவகை கொள்ளவே திண்ணிய நெஞ்சமும், தெளிந்த நல்லறிவுமாய்

பாரதி வழி நடந்திட வாழ்த்துகிறோம்! வாழ்த்துகிறோம்!

திண்ணிய நெஞ்சமும், தெளிந்த நல்லறிவுமாய்

பாரதி வழி நடந்திட வாழ்த்துகிறோம்! வாழ்த்துகிறோம்!

**திருமதி சுகந்தி ராதாகிருஷ்ணன்**



# தமிழ்ச்சங்கக் காணுலா

மே 10, 2025 . கேரொலைனா தமிழ்ச்சங்கத்தின் சார்பில், காணுலாவும் விளையாட்டுப் போட்டிகளும் " வெயிலோடு விளையாடி " நிகழ்வாக, கேரி நகரில் உள்ள கிரேப்ட்ரீ கண்மாய்ப் பூங்காவில் இடம் பெற்றது.

காலை ஏழு மணிக்கெல்லாம் விளையாட்டுகளில் பங்கேற்கக் குழுவினர் வருகையளித்தனர். அதனைத் தொடர்ந்து விளையாட்டுப் போட்டிகள் துவக்கப்பட்டு தொடர்ந்து நடந்து கொண்டிருந்தன. காலை பத்து மணிக்கு வருகைப்பதிவுப் பணிகள் துவக்கப்பட்டு, வந்திருந்தோர் அனைவருக்கும் வரவேற்பும் நண்பகல் உணவுக்கான சிட்டைகள் வழங்கப்பட்டன.

பூங்காவிலிருக்கும் புல்வெளித் திடல், விளையாட்டுத்திடல் என எங்கும் தமிழ் ஆரவாரம் நிறைந்திருந்தது. குழைந்தைகளுக்கான விளையாட்டு, பெரியவர்களுக்கான விளையாட்டு, கண்டுகளிப்பு முதலானவை குதூகலத்துடன் தொடர்ந்தன.

தாவளக்குடிலில் சிறுதானிய உணவுக்கண்காட்சியும் போட்டியும் இடம் பெற்றிருந்தன. பலரும் ஆர்வத்துடன் பல்வேறு சிற்றுண்டிகளை விதவிதமான புத்தாக்கத்துடன் படைத்துக் கொண்டு வந்து, அழகுறக் காட்சிப்படுத்தி இருந்தனர். போட்டிக்குழுவினரின் சுவையறிதலுக்குப் பிறகு, படைக்கப்பட்டிருந்த பலகாரங்களையெல்லாம் தமிழ்ச்சமூகம் உண்டு மகிழ்ந்தது.

உண்டாட்டு நிகழ்வில் பலநூற்றுக்கணக்கான தமிழர்கள் பங்கேற்று சுவையான விருந்தோம்பலில் பங்கேற்று மகிழ்ந்தனர். உணவு விருந்தோம்பலுக்குப் பிறகு, சிறுதானியச் சிற்றுண்டிக்கான போட்டி முடிவுகள் அறிவிக்கப்பட்டு, பரிசுகள் வழங்கப்பட்டன.

வட அமெரிக்கத் தமிழ்ச்சங்கப் பேரவையும் கேரொலைனா தமிழ்ச்சங்கமும் இணைந்து நடத்தும் பேரவைத்திருவிழா , ஜூலை 3, 4, 5 ஆகிய நாள்களில் இடம் பெறுவதன் நிமித்தம், விழா, விழா குறித்த பணிகளை பேரவை விழாக்குழுவினர்,வந்திருந்தோரிடம்




எடுத்தியம்பினர். வரவிருக்கும் கலைஞர்கள், அறிஞர்கள், தொழில்சார் வல்லுநர்கள், இடம்பெறவுள்ள கலை, இலக்கிய நிகழ்ச்சிகள் முதலானவ குறித்து விரிவாக எடுத்துரைக்கப்பட்டது. சிற்றிடை உணவாக, வெங்காயப் பக்கோடா, தேநீர் முதலானவையும் அளிக்கப்பட்டன.

தமிழ்ச்சங்கத்தின் நிர்வாகிகளான, தலைவர் முனைவர் பாரதி பாண்டி, துணைத்தலைவர் ஆனந்த் செல்வராஜ், செயலாளர் பாரதி முருகேசன், துணைச்செயலாளர் மீனாஇளஞ்செயன், பொருளாளர் சண்முகம் பச்சமுத்து, இயக்குநர்கள் பரத், கபிலன் சம்பத், கார்த்திகா, கோதை, சாந்தி கண்ணன், சத்யா, பேரவையின் முன்னாள் தலைவர் முனைவர் தணி சேரன், முன்னாள் தலைவர் மோகன் வைரக்கண்ணு, விழா துணை ஒருங்கிணைப்பாளர்கள் மீனாட்சி சுந்தரம், சாருலதா குருபரன், விழாக் குழுத்தலைவர்கள் முரளி, தங்க முருகேசன், உமா சேகர் உள்ளிட்ட ஏராளமானோர் பங்கேற்றிருந்தனர்.

### பேரவை விழாக்குழுவினரின் பயணம்

மே 5 2025, வட அமெரிக்கத் தமிழ்ச்சங்கப் பேரவையின் 38ஆவது தமிழ் விழா, கேரொலைனா தமிழ்ச்சங்கத்துடன் இணைந்து, வட கேரொலைனா மாகாணத்தின் இராலே நகரில், எதிர்வரும் சூலை 3, 4, 5 ஆகிய நாள்களில், "தமிழால் இணைவோம் தமிழராய் வாழ்வோம்" எனும் கருப்பொருளுடன், தவத்திரு குன்றக்குடி அடிகளார், தோழர் இரா.நல்லகண்ணு ஆகியோரின் நூற்றாண்டு விழாவாகவும் இடம் பெற உள்ளது. அதன்நிமித்தம் பேரவை விழாக்குழுவினர் பல்வேறு தமிழ்ச்சங்க விழாக்களிலும் கலந்து கொண்டதோடு, தமிழ்ச்சங்க நிர்வாகிகள், பேரவை முன்னோடிகள், ஆர்வலர்களைத் தொடர்ந்து சந்தித்து வருகின்றனர்.

மே மாதம் இரண்டாம் நாள் துவக்கம், தலைவர் விஜய் மணிவேல், செயலாளர் கபிலன் வெள்ளையா, ஒருங்கிணைப்பாளர்கள் மீனா இளஞ்செயன், பாரதி முருகேசன் உள்ளிட்டோர், ஒலி என்பதெல்லாம் செந்தமிழ் முழக்கம், ஒளி என்பதெல்லாம் தமிழ்க் கலைகளேயெனும் வண்ணம் திருவிழாவினை, தமிழ்த் திருவிழாவினை ஆக்கிடுவோமென, டெலாவர் பெருநிலத் தமிழ்ச்சங்கம், வாசிங்டன் வட்டாரத் தமிழ்ச்சங்கம், ஆரிசுபர்க் தமிழ்ச்சங்க, நியூசெர்சி தமிழ்ப்பேரவை, நியூசெர்சி தமிழ்ச்சங்கம், தென்செர்சி தமிழ்ச்சங்கம் உள்ளிட்ட அமைப்புகளின் நிர்வாகிகளுடனான சந்திப்பு, விழாக்கள் உள்ளிட்ட நிகழ்வுகளில் பங்கேற்று, பேரவை விழாவுக்கான கொடை திரட்டுதல், அழைப்பு விடுத்தல் முதலான செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றனர்.

JULY 03 - 05, 2025

பேரவையின் 38ஆவது தமிழ் விழா 2025

FeTNA 38th TAMIL CONVENTION 2025

தமிழால் இணைவோம்! தமிழராய் வாழ்வோம்!!




## தமிழால் இணைவோம் தமிழராய் வாழ்வோம்




### தவத்திரு குன்றக்குடி அடிகளார்
### தோழர் இரா.நல்லகண்ணு
### நூற்றாண்டு விழா

# பேரவைத் திருவிழா பயன்கள்



**பழமைபேசி**
வட கரோலைனா

வட அமெரிக்கத் தமிழ்ச்சங்கப் பேரவையின் 38ஆவது ஆண்டுவிழா, எதிர்வரும் ஜூலை 3, 4, 5 ஆகிய நாள்களில், கேரொலைனா தமிழ்ச்சங்கத்துடன் இணைந்து, வட கேரொலைனா மாகாணத்தின் இராலே நகரில் நிகழ்வுள்ளது. அதற்கான பணிகள் முழுவீச்சில் இடம் பெற்று வருகின்றன. நாம் ஏன் பேரவைத் திருவிழாவில் பங்கேற்க வேண்டும்?

களிப்புக்கும் கேளிக்கைக்குமான நிகழ்வு எனப் பொத்தாம் பொதுவாகக் கருதிவிடலாகாது. ஏனென்றால், பேரவைத் திருவிழா என்பது தமிழருக்கான வாழ்வியல்த் திருவிழா, தமிழ்விழா.

அமெரிக்க அரசாங்கம் ஏன் வரிவிலக்கு கொடுத்து இலாபநோக்கற்ற அமைப்புகளுக்கு ஆதரவளிக்கின்றது? 1830களில் அமெரிக்காவுக்கு வந்த பிரான்சு நாட்டு *தத்துவஞானி அலெக்சி டெ டொக்கவில்* என்பார், முறையான உள்ளூர் அரசு அமைப்புகள் இல்லாத போதும், தன்னலமில்லாத் தன்னார்வலர்கள் ஆங்காங்கே கூடி, வாழ்வியலுக்குத் தேவையான பணிகளைச் செய்வதும், அதன்நிமித்தம் மாந்தநேயம் தழைத்தோங்குவதையும் கண்டவர், இப்படியானவற்றுக்கு ஊக்கமளித்தல் வேண்டுமெனவும், அமைதியையும் பலதரப்பட்ட மக்களை உள்வாங்கிச் செயற்படுவதால் ஏற்படும் புத்தாக்க விழுமியங்களையும் இனம் கண்டு வியந்தோதினார். இப்படியான அவரது கருதுகோளை அடிப்படையாகக் கொண்டு, 1913ஆம் ஆண்டு வரிவிலக்குச் சட்டம் நடைமுறைக்கு வந்தது. வட அமெரிக்கத் தமிழ்ச்சங்கப் பேரவையின் ஆண்டுவிழாவும் இதனைத் தழுவியதுதான்.

- எங்கோ முளைத்து வட அமெரிக்க மண்ணில் ஊன்றியிருக்கும் தமிழ்மக்களுக்கான நாடலும் தேடலும் காணலுமான ஆற்றங்கரை வெளியைப் போன்றதொரு கூடல்வெளிதான் வட அமெரிக்கத் தமிழ்ச்சங்கப் பேரவையின் திருவிழா வளாகம்.
- தொடர்பு வளையங்களைக் கட்டமைத்து, ஒருவருக்கொருவர் கொழுகொம்பாய் இருந்து ஆதரவு பேணுதல்.
- தமக்கும் தம் குடும்பத்துப் பிள்ளைகளுக்குமான

அறிதலுக்கும் கல்விக்குமான தளத்தில் கலந்து பயன் பெறுதல்.

- வாழ்வியல் தேவைகளின் பொருட்டு, கல்வி, மருத்துவம், தொழில், கலை, இலக்கியம், பண்பாடு, வணிகம், நிதிமேலாண்மை முதலான துறைகளின் நடப்பறிதலும் புதுவரவுகள் கண்டு கொளளலும்.
- துறைசார் அறிஞர்களுடன் கலந்துரையாடுவதன் வாயிலாகவும், அவர்களின் உரைகளுக்குச் செவிமடுப்பதன் வாயிலாகவும் ஊக்கமுற்று, அவரவர்க்கு விருப்பமான துறைகளில் ஊக்கம் கொள்வதும், அறிந்திராத துறைகள் குறித்துப் புரிந்து நாட்டம் கொளளலும் உந்துசக்தியாக அவர்களின் உதவிகளைப் பெற்றுக் கொள்தலும்.
- உழைத்துக் கொண்டே இருப்போருக்கு அவ்வப்போதைய ஓய்வும் களிப்பும் கேளிக்கையும் அடுத்தகட்ட நகர்வுக்கான ஊக்கத்தைக் கொடுக்கவல்லது. அதுதான், மரபுசார் கலை, இலக்கிய, இயல், இசை, நாடக நாட்டியங்களின் அடிப்படை, தோற்றுவாய். அவற்றை அடைவதற்கான வெளியாகப் பயன்படுத்திக் கொள்தலும், கலைகளை வெளிப்படுத்துவதன் வாயிலாக இறும்பூது எய்திப் புத்துணர்வு பெறுவதும்.
- நமக்கான மொழி, அடையாளம், பண்பாடு, கலை, இலக்கியம் முதலானவற்றைப் போற்றுவதன் வழி, நமக்கான பாதுகாப்பு, உரிமைகள், பெருமைகள் முதலானவற்றைத் தக்கவைத்துக் கொள்தலும் மேம்படுத்திக் கொள்வதில் வெற்றி கொளளலும்.
- வேலைவாய்ப்பு, வணிகம், தொழில்முனைவு, கல்வி, ஆய்வு முதலான துறைகளில் தமக்கான புதிய திறப்புகளைக் கண்டடைவதற்கான வெளியாகக் கட்டமைத்துக் கொள்வது.
- தமக்கான ஒத்த பண்பாடு, அடையாளம், மொழி, உணவு, உடை, பின்புலம், கல்லூரிகள் எனப் பலவற்றின்பாலும் உவகை கொள்வது மனிதனின் இயல்பு. அப்படியானவற்றின்பால் திரண்டு கொண்டாடவும் பின்புலமாக இருக்கவும் சமூகவெளியைக் கட்டமைத்துக் கொள்ளும் பொருட்டுக் கூடிக் குலாவுதல்.
- தகவல், வெளியீடுகள், சாதனங்கள், கருவிகள், வழிகாட்டிகள், ஆசிரியர்கள், பங்குதாரர்கள், முதலீட்டாளர்கள், இணையர், தோழர், நண்பர் எனத் தம் வாழ்வியலுக்குத் தேவையான வளங்களைக் கண்டடைதல்.
- பொழுதுபோக்காக, விடுப்புமுறை இளைப்பாறலாக, உணவு, கலைநிகழ்ச்சிகள், புதிய இடம், உள்ளூர் வரலாறு முதலானவற்றைக் கண்டு தரிசிக்குப் பொருட்டாகப் பாவித்துக் கொளளலும்.

இப்படியாக, இன்று இருக்கும் நமக்கும், நாளைய நமக்கும் இடையில், தனிப்பட்ட முறையிலும், குடும்ப வளர்ச்சி, சமூக வளர்ச்சி போன்ற பொதுநோக்கிலும் மேம்பாட்டினை நிலைநாட்டிக் கொள்ள முடியும். அதனாலேதான், பிரஞ்சுத் தத்துவஞானி அலெக்சி டெ டொக்கவில் இன்றளவும் நினைவுகூரப்படுகின்றார்.

## வாழ்த்துகள்

# அட்டைப்பட ஓவியங்கள் தந்த நம்ம ஊர் ஓவியர்கள்



முன்பக்க அட்டை படம்

**நந்தீஸ்வரி ஜெயராமன்,**
விஸ்கான்சின் தமிழ்ச் சங்கம்,
மேடிசன், விஸ்கான்சின்.



பின்பக்க அட்டை படம்

**ரணியா கந்தசாமி,**
நியூயார்க் தமிழ் அகாடமி



# மீண்டும் உதித்தது வானவில்

முன்பொரு அழகிய நிலாக்காலத்தில்
சிட்டாய்ப் பறந்தோடிய சிறு பால வயதில்
நண்பர்கள் குழாமுடன் விளையாடிக் களித்த
பொன் மாலைப் பொழுதில்...
இளவேனிற் பூஞ்சாரல் மழையும்
குடதிசை சாயும் முன்
மஞ்சளொளி விரவிய கதிரும்
சங்கமித்த கணத்தில்...
நட்புச் சிறார்களில் ஒருவன்
"ஓடிவா...ஓடிவா...அதோ பார்!"
அதிசயக் கூவலாய் அழைப்பு விடுக்க...
"எங்கே? எங்கே? அதோ! அங்கே அங்கே..."

கண்டோம் விண்ணிலோர் மாயாஜாலம்!
அருணனும், வருணனும்
நேரெதிர் சந்தித்த கொண்டாட்டமோ?
முகில் இழை கோர்த்து விண் பட்டாடையில்
வண்ண ஜரிகைத் தைத்தனரோ?
வளைவின் முடிவில் பொன் பானையுண்டாம்,
பொத்திக் காக்கும் சித்திரக் குள்ளனுண்டாம்,
புள்ளினம் மகிழும் முல்லை நிலமுண்டாம்,
ஒற்றைக் கொம்பு வெண் புரவியுண்டாம்,
பிணி போக்கும் அமுதசுரபி ஊற்றுண்டாம்,
"ஒஹோ...ஆஹா...ஒஹோ...ஆஹா...!"




**நளினி சுந்தரராஜன்**
கவிஞர்,
விஸ்கான்சின், வட அமெரிக்கா.


மழைவில் மறையும் முன்
பல நூறு மாயக் கதைகள்
பேசி மகிழ்ந்த நினைவை
இன்று அசை போடுகையில்...
மீண்டும் வாராதோ குழந்தைப் பருவம்
என்ற ஏக்கத்தில் விழியோரம் உருண்டோடிய
கண்ணீர்த் துளியில் நினைவின் ஒளி பட்டதால்
மீண்டும் உதித்தது மனதில் அந்த வானவில்!






@ RALEIGH CONVENTION CENTER
500 South Salisbury Street, Raleigh, NC 27601
JULY
03, 04 & 05
2025
Thursday, Friday & Saturday
பேரவையின்
38ஆவது தமிழ் விழா
கவியரங்கம்
SNEKAN
கவிஞர்
சினேகன்
திரைப்படப் பாடலாசிரியர், நடிகர்
TO REGISTER:
To Register: www.fetna-convention.org



# எழிலும் இளா அத்தை வீடும் – ‘பறு’

அன்று காலையில் இருந்தே எழிலின் கால்கள் தரையில் நிலைகொள்ளவில்லை. மகிழ்ச்சியில் குதூகலித்துக் கொண்டிருந்தான். முகம் முழுக்கப் புன்னகை, வாயெல்லாம் பல் என வளைய வந்தவனை “பாருங்கம்மா இவனை. பள்ளிக்கூடம் இல்லேன்னா தூங்கி வழிவான். இப்ப எத்தனை சுறுசுறுப்பா இருக்கான்னு” என்று அக்கா கூடக் கிண்டல் செய்தாள்.

தேர்வு முடிந்து விடுமுறை ஆரம்பித்திருப்பது தான் அவன் பூரிப்புக்குக் காரணம் என்று தானே நினைக்கிறீர்கள்? உங்கள் யூகம் சரி தான். ஆனால், அதுமட்டுமல்ல காரணம். முதன்முதலாகத் தன் ஊரை விட்டு நகரத்திற்குச் செல்ல இருப்பதை ஒட்டித்தான் அவனுள் அத்தனை களிப்பு. இன்று இளா அத்தை வந்து அவனைத் தன் வீட்டுக்கு அழைத்துச் செல்வதாகச் சொல்லி இருந்தார்.

அங்கு ஒழுங்காக நடக்க வேண்டும். சொல்பேச்சு கேட்க வேண்டும் என்று பலமுறை நினைவுறுத்தியபடி இருந்தார் எழிலின் அம்மா. காலை எழுந்ததும் பல் துலக்கி, தலை வாரி, குளித்து உணவருந்த வேண்டும் என்ற அறிவுரைகளை அம்மா சொல்ல, காதில் வாங்கினானோ இல்லையோ, எழில் எல்லாப் பக்கமும் தலையசைத்தான். அக்கா அவனுடைய உடைகளை அடுக்கிக் கொடுக்க, எழில் விரைந்து தயாரானான்.

சொன்ன மாதிரியே இளா அத்தை மதியம் வந்து விட, அப்பா அத்தையை நிலையத்தில் இருந்து அழைத்து வந்தார். வாசலிலேயே எழில் தன் பையுடன் தயாராக நின்றதை கண்டு அனைவரும் சிரித்தார்கள். அக்காவையும் ஊருக்கு வர சொல்லி அத்தை வற்புறுத்தினார். அடுத்த முறை பார்க்கலாம் என்று அப்பா சொன்னதை ஒட்டி எழிலும் அத்தையும் அன்று மாலை இரயிலில் கிளம்பினார்கள்.

ரயில்வண்டியில் போகும்போது ஜன்னல் வழியே விரைந்து மறைந்த காட்சிகள் எழிலுக்குப் பரவசம் தந்தன. எத்தனை ஊர்கள், வயல்கள், தோப்புகள், இயற்கைவளங்கள். இவற்றைப் பார்க்க அக்கா உடன் வரவில்லையே என்று கொஞ்சம் கவலை கூட வந்தது அவனுக்கு.

அவளும் வந்திருக்கலாம். ஆனால், விடுமுறை நாட்களில் அவள் அம்மாவுடன் வேலைக்குச் செல்வாள். அதில் வரும் பணம் வீட்டுச்செலவுக்கு உதவும் என்பதால் தான் அக்காவால் வர முடியவில்லை. அதை நினைத்ததும் அவன் முகம் சோர்ந்தது. அப்படியே அவன் உறங்கி விட, விழித்துப் பார்க்கும்போது நகரம் வந்திருந்தது.

இருவரும் மகிழுந்து பிடித்து வீடு செல்ல, மாமாவும் குட்டிப்பெண் அகிலாவும் எழிலை வரவேற்றனர். தான் கொண்டு வந்த பொன்வண்டு அடைத்த தீப்பெட்டியை எழில் கொடுக்க, அகிலாவின் கண்கள் விரிந்தன. அவள் தான் வளர்க்கும் பூனைக்குட்டியைக் காண்பிக்க, இருவரும் விளையாட ஆரம்பித்தார்கள்.

சிறிது நேரத்திலேயே மாமா உணவுண்ண அழைக்க,

எழிலுக்கு வியப்பாக இருந்தது. இளா அத்தை இப்போது தானே தன்னுடன் வந்தார்கள், பிறகு யார் சமைத்தது?

“உனக்குப் பூரி பிடிக்கும் தானே. நான் தான் சமைத்தேன்” பொன்னிறத்தில் உப்பியிருந்த பூரிகளை மாமா சுமந்து வர, “ஆ”வெனப் பார்த்தான் எழில்.

“மாமா, உங்களுக்குப் பூரி சுட தெரியுமா?”

“ஏன் தெரியாம? சாப்பிட தெரியும்போது சமைக்கவும் தெரியணும் தானே” மாமா கண்சிமிட்டினார்.

எழிலுக்கு ஆச்சரியம் தாங்கவில்லை. அவன் வீட்டில் அம்மா தான் சமைப்பார். அக்கா உதவி செய்வாள். அப்பா வேலைக்குச் சென்று, தேவைப்பட்டால் கடைகளுக்குப் போய் வருவார். எழிலுக்குப் பக்கத்து வீட்டு பாலுவுடன் கிரிக்கெட் விளையாடுவது மட்டும் தான் வேலை. இங்கு மாமா சமைக்கிறாரா!?

பயணக்களைப்பு நீங்க குளித்து, புத்துணர்வுடன் அறையில் இருந்து வெளியே வந்த அத்தை “வா எழில். சாப்பிடலாம்” என்றழைக்க, எழில் சாப்பிட அமர்ந்தான்.



**ஹேமா ஜெய்,**
**சால்ட் லேக் சிட்டி, யூட்ட**

பூரியும் கடலை மசாலாவும் வெகு ருசியாக இருந்தன.

உண்டு முடித்ததும் எல்லோருமாகப் பாத்திரங்களை எடுத்து வைத்தார்கள். அத்தை பாத்திரங்களைத் துலக்க, மாமா கழுவி எடுத்தார். அகிலாக்குட்டி அவற்றைத் துடைத்து அடுக்க, அவர்களையே சற்று நேரம் பார்த்து நின்ற எழில் தானும் அவளுக்கு உதவ ஆரம்பித்தான். அடுத்து மாமா தரையைப் பெருக்க, அத்தை படுக்கையை விரிக்க, அகிலாவும் அவனுமாகத் தலையணைகள் அடுக்கினர்.

“நல்ல பையன் எழில்” என்று அத்தை அவன் தலையைக் கோதியபோது அவனுக்கு மிக மகிழ்வாக இருந்தது. இப்படி நிறைய உதவிகள் செய்து அம்மா சொன்னமாதிரி நற்பெயர் வாங்க வேண்டும் என்று நினைத்தபடியே உறங்கிப் போனான்.

முதல்நாள் போலவே, அத்தை வேலைக்குச் சென்று தாமதித்து வரும் நாட்களில் மாமா வீட்டு வேலைகள் செய்ய, மாமா களைத்து வரும் நாட்களில் அத்தை எல்லாவற்றையும் பார்த்துக் கொள்வார். எழிலும் அகிலாவும் உதவுவார்கள். பகிர்ந்து வேலை செய்வதால் நிறைய நேரம் கிடைக்க, மொட்டை மாடியில் நிலாச்சோறு உண்டனர். தொடர்ப்பாட்டும் மௌனமொழியும் விளையாடினர். வார இறுதிகளில் கடற்கரை சென்று, விளையாடி, வரும் வழியில் சுட்ட சோளமும், மாங்காய் கீற்றும், பானி பூரியும் ருசித்தார்கள்.



இப்படியே நாட்கள் கொண்டாட்டமாகக் கழிய, விடுமுறை முடியும் நாளும் வந்தது. அவர்களைப் பிரிவது வருத்தம் தந்தாலும் தன் வீட்டினரை பார்க்கும் சந்தோசத்தில் எழில் ஊர் திரும்பினான். அகிலாக்குட்டி பரிசளித்திருந்த கார் பொம்மையுடன் வீடு வந்த எழிலை அம்மாவும் அக்காவும் அணைத்துக் கொண்டார்கள். ஊர் எப்படி இருந்தது என்று அப்பா விசாரித்தார்.

சிறிது நேரத்தில் சாப்பிடலாமா என்று அப்பா கேட்க, அம்மாவும் அக்காவும் விரைந்து எழுந்தார்கள். “நீங்க இருங்கம்மா” என்று அவர்களைத் தடுத்த எழில், “நான் எடுத்து வைக்கிறேன்க்கா. அப்பா நீங்களும் வாங்க. அம்மாவும் அக்காவும் கொஞ்சம் ஓய்வா அமரட்டும். நாம எடுத்து வைக்கலாம்” என்று அப்பாவை அழைத்தான். வியப்பாகப் பார்த்தாலும், “ஓ! வருகிறேனே” என்று தானும் எழுந்து வந்தார் அப்பா.




# சிங்கா என்னும் சிங்கக்குட்டி - ‘நட’

குதிரை மாமா மணி அடிக்க, அன்று பள்ளி துவங்கியது.

எலியும், சிவப்பு எறும்பும் வெட்டுக்கிளியும் முன் வரிசையில் அமர, அடுத்த வரிசையில் அணிலும் நாயும் கரடிக்குட்டியும் இருந்தன.

கடைசி வரிசையில் ஒட்டகச்சிவங்கியும் நீர் யானையும் புலியும். வழக்கம் போலவே சிங்கா எனும் சிங்கக்குட்டி மட்டும் வகுப்புக்குத் தாமதமாக வந்தது. ‘இன்றும் தாமதமா?’ என்று மான் ஆசிரியை கேட்க, எல்லோரும் சிரித்தார்கள். சிங்காவும் சிரித்துக் கொண்டே உள்ளே வந்தது.

‘காடு நல்ல காடு

அது தான் எங்கள் வீடு’ என்று ஆசிரியை பாட, எல்லோரும் உடன் சேர்ந்து பாடினார்கள். மதிய இடைவேளை வர, அனைவரும் தங்கள் உணவைப் பிரித்தார்கள். சிங்கா மட்டும் அங்கிருந்த ஓடை நீரை அருந்தி விட்டு ஓரமாக அமர்ந்தது. சிங்காவின் அம்மாவுக்கு உடம்பு சரியில்லை. அதனால் சிங்கா இன்று சாப்பாடு கொண்டு வரவில்லை.

வழக்கமாக நிறைய உணவு கொண்டு வரும். வெளியில் உள்ள மரத்தடியில் தனியாக அமர்ந்து வயிறு புடைக்கச் சாப்பிடும். ஆனால், இன்று உணவு இல்லை என்பதால் சிங்காவுக்கு நிறையப் பசித்தது. வயிறு வலிப்பது போலிருந்தது. நெஞ்சு எரிந்தது. எவ்வளவு தண்ணீர் குடித்தும் பசி தீரவில்லை.

வயிற்றைத் தடவி கொண்டே சோர்ந்து படுத்து விட்டது.

அப்போது எறும்பும் எலியும் சிங்காவிடம் வந்தன. தினமும் எடுத்து வரும் பெரிய உணவுப்பையை எடுத்து வராமல் சிங்கா வந்ததை எறும்பு பார்த்திருந்தது.

அது சிங்காவிடம் “சாப்பிட வா” என்றது.

“வேண்டாம். எனக்குப் பசியில்லை” என்றது சிங்கா.

“முடியாது. நீ வந்தே ஆக வேண்டும்” என்று வெட்டுக்கிளியும் எறும்பும் எலியும் அணிலும் சிங்காவைச் சூழ்ந்து கொண்டன. அதற்குமேல் மறுக்க முடியாமல் சிங்கா அவர்களுடன் சென்று அமர்ந்தது. எல்லோரும் தங்கள் உணவை சிங்காவுடன் பகிர்ந்து கொண்டனர்.

எறும்பு கொண்டு வந்த அரிசி, எலி கொண்டு வந்த பருப்பு, வெட்டுக்கிளியின் புல் உணவு, அணிலின் காய்கறி, கரடிக்குட்டியின் தேன் என உணவு வெகு ருசியாக இருந்தது. சிங்கா ரசித்து உண்டது.

“நான் உணவு கொண்டு வரும்போதும் இப்படிச் சேர்ந்து சாப்பிட வேண்டும்” என்றது சிங்கா.

“நாம் அனைவரும் இனி நண்பர்கள். பகிர்ந்து சாப்பிடுவோம்” என்றது அணில். மகிழ்வுடன் தலையாட்டினார்கள் அனைவரும்.

அடுத்த வகுப்பு விளையாட்டு என்பதால் மான் ஆசிரியை அவர்களைக் காட்டுக்குள் அழைத்துச் சென்றார். சிங்காவும் எலியும் கரடிக்குட்டியும் ஓடிப் பிடித்து விளையாடினார்கள். வெட்டுக்கிளியும் அணிலும் சிங்கா மீது ஏறிக் குதித்தன.

“நாங்கள் நண்பர்கள்

நாங்கள் நண்பர்கள்” என்று அனைவரும் குதித்துக் கொண்டே பாடினார்கள்.




# விழா எடுப்போம்!



சோம. இளங்கோவன்

அருமைத் தமிழ் நெஞ்சங்களே ! அனைவர்க்கும் அன்பான வாழ்த்துக்கள்

வட அமெரிக்கத் தமிழ்ச்சங்கப் பேரவை எவ்வளவோ ஏற்றங்களைப் பெற்ற அமைப்பு .

ஆட்ட பாட்டங்கள் அதுவும் தமிழில் இல்லாமல் கூடத் தமிழ்ச்சங்கங்கள் இயங்கி வந்த நாட்களை எண்ணிப் பார்க்கின்றேன் அங்கிருந்து நாம் எவ்வளவோ மேடு பள்ளங்களைப் பார்த்துள்ளோம் தமிழரென்றால் உணர்ச்சிகள் பொங்கி வழியுமன்றோ? அவற்றையெல்லாம் பேரவை நன்றாகப் பார்த்துத்தான் வளர்ந்துள்ளது பல மாற்றங்கள் சிலருக்கு வெற்றியாகவும், சிலருக்குத் தோல்வியாகவும் பாராட்டுக்கள் வழக்குகள் எல்லாவற்றையும் பார்த்த அமைப்புத்தான் பேரவை நாம் அழைத்துச் சிறப்பு செய்தவர்களில் வெகு சிலரே நமக்கு உதவியும் ஆதரவும் தந்துள்ளனர். நாம் அழைக்காத எவ்வளவோ பேர் உதவியுள்ளனர் சிலர் பெரும் ஏமாற்றங்களையும் தந்துள்ளனர் !வரலாறு அப்படித்தானே இருக்கும் பலர் அவர்களால் முடிந்ததற்கு மெலேயே சாதனை படைத்துள்ளனர் பெயர்களைச் சொல்லி அவர்களைப் பெருமைப் படுத்துவது நமது கடமை என்றாலும் அதனால் வரும் தேவையற்றச் சிக்கல்களை நினைத்து அதை வெளியிட வேண்டிய தேவையில்லை பட்டியலும் மிகவும் பெரிதாக இருக்குமன்றோ!

இன்றைய கால கட்டத்திற்கு வருவோம் தேர்தல் வருவது நல்லது தான் . ஆனால் அதன் பின்னர் வரும் ஒத்துழைப்பில்லாமல் ஒரு நோயாக இருக்கக் கூடாது அதற்காகத்தான் சில வார்த்தைகள் உங்களிடம் பேச விரும்புகின்றேன்.

பேரவை நமது அங்கம் உடன் பிறப்புக்களாக நாம் மோதிக்கொள்ளலாம் ஆனால் விழா என்றால் அதில் அனைவரும் பங்கேற்க வேண்டும் நமக்குத் பிடித்தது பிடிக்காதது கட்டாயம் நடக்குந்தான். அனைத்தும் அனைவர்க்கும் பிடித்த மாதிரி இருக்க முடியாது தானே ?மக்களின் ஆதரவு எதிர்காலத்தைத் தீர்மானித்துக் கொள்ளும் ஆகவே தயைசெய்து நமது வேற்றுமைகளை ஒதுக்கிவிட்டு விழாவை நடத்த வேண்டியது நம் அனைவரின் கடமை அதிலும் முன்னாள் பொறுப்பாளர்கள் கட்டாயம் தானே முன் வந்து பங்கேற்க வேண்டும். அழைப்பு நமக்கு வேண்டியதில்லை இது நமது விழா விழா சிறப்பாக நடக்கவில்லை என்றால் அது நம் அனைவருக்கும் தான் தாழ்வு தாழ்வு நடக்காமல் இருப்பது நம் அனைவரின் கடமை

காலம் காத்திருக்காது வேலை நிறைய இருக்கும் நம்மால் முடிந்ததை அழைப்பிற்கு எதிர் பார்க்காமல் அனைவரும் சேர்ந்து செய்வோம் பொருளாதார உதவி மற்றும் எந்த வகையில் ஒவ்வொருவரும் உதவ முடியுமோ கட்டாயம் உதவ வேண்டும் .அது நமது கடமை. எங்கள் வாழ்வும் எங்கள் வளமும் மங்காத தமிழென்று சங்கே முழங்கு !

மிக்க அன்புடன், சோம. இளங்கோவன்


பேரவையின்
38ஆவது தமிழ் விழா
DIMMAN
கச்சேரி
ஆரம்பம்
SINGER AND COMPOSER
D IMMAN
SINGER VANDANA SRINIVASAN
SINGER SRINIDHI SRIPRAKASH SINGER SOUNDARYA
SINGER MUKESH SINGER SANTHOSH HARIHARAN SINGER JITHINRAJ
MUKESH
SOUNDARYA
JITHINRAJ
SANTHOSH
SRINIDHI
VANDANA
LIVE IN
Raleigh, NC
USA
JULY 03, 04 & 05, 2025
Raleigh Convention Center
500 South Salisbury Street, Raleigh, NC 27601
www.fetna-convention.org




# உடல் எடையைக் குறைக்கச் சில யோசனைகள்

உலகில் *1.9* பில்லியன் மக்கள் உடல் எடை அதிகம் கொண்டவர்களாக இருக்கிறார்கள் என *2016* ஆம் ஆண்டின் உலகச் சுகாதார அமைப்பின் *(WHO)* மதிப்பீடு சொல்கிறது. கூடுதலாக இந்திய தேசிய குடும்பநல சுகாதாரக் கணக்கெடுப்பின்படி, பத்து வருட காலத்தில், அதாவது *2005-2006*லிருந்து *2015-2016* வரையில் *49* வயதுக்குட்பட்ட உடல் எடை அதிகம் உள்ள பெண்களின் எண்ணிக்கை *13* சதவிதத்தில் இருந்து *21* சதவிதமாக உயர்ந்துள்ளது என்றும் அதே வயதுக்கு உட்பட்ட எடை அதிகமுள்ள ஆண்களின் எண்ணிக்கையும் *9.35* சதவீதத்தில் இருந்து *19* சதவீதமாக உயர்ந்துள்ளது என்றும் தெரிய வந்துள்ளது. உடல் எடை அதிகமாக இருந்தால் உயர்ந்த ரத்த அழுத்தம், அதிகக் கொழுப்புச் சத்து, நீரிழிவு நோய், இதய சம்மந்தப்பட்ட நோய், நெஞ்செரிச்சல் எனப் பல நோய்கள் மற்றும் உடல் உபாதைகள் நம்மைத் தாக்கும். இவற்றைத் தவிர்த்து நல்ல ஆரோக்கியத்துடன் இருக்க வேண்டுமென்றால் நம் உடல் எடையைக் குறைத்துக் கட்டுக்கோப்பாக வைத்திருப்பது மிக அவசியம். உடற்பயிற்சி இதற்கு மிகவும் உதவுகிறது. உடற்பயிற்சி செய்வது மனதுக்கும் உடலுக்கும் புத்துணர்ச்சியையும் உற்சாகத்தையும் அளிக்கும். அதற்காகத் தினமும் கடினமான உடற்பயிற்சி செய்ய வேண்டும் என்பது அவசியமில்லை. ஆனால் நம் வாழ்க்கையின் ஓட்டத்தில் உடற்பயிற்சிக்கென அதிக நேரத்தை நம்மால் ஒதுக்க முடிவதில்லை என்றால் சில மாற்று வழிகளைக் கடைப்பிடிக்கலாம்.



**லாவண்யா சீலன்**
இர்வைன், கலிபோர்னியா.

‘உணவுக்கும் மருந்துக்கும் அதிக வேற்றுமை இல்லை’ என லின் யுடாங் என்பவர் ‘தி இம்பார்டன்ஸ் ஆஃப் லிவிங்’ என்ற தனது புத்தகத்தில் குறிப்பிட்டிருக்கின்றார். அது முற்றிலும் உண்மை. உணவுப் பழக்கவழக்கங்கள் சிலதை நாம் மாற்றிக் கொண்டாலே நாம் நம் உடல் எடையைக் குறைப்பதோடு வாழ்வின் தரத்தையும் உயர்த்திக் கொள்ளலாம்.

### ‘பதறிய காரியம் சிதறும்’

பெரியவர்கள் இதை அடிக்கடிச் சொல்லக் கேட்டிருப்போம். எந்தச் செயலையும் நிதானமாகச் செய்தால் அது நமக்கு நன்மையில் வந்து முடியும். இது நாம் சாப்பிடும் முறைக்கும் மிகவும் பொருந்தும். நேரமின்மை காரணமாக ஏதோ வயிற்றை நிரப்ப வேண்டுமே என அவசர அவசரமாகச் சாப்பிடுவதால் நன்றாக மென்று தின்பதை மறந்தே போகின்றோம். அதனால் வாயில் உமிழ்நீர் சுரப்பது குறைந்து போகின்றது. இந்த உமிழ்நீரில் அமிலேஸ் என்ற மாப்பொருணொதி *(enzyme)* இருக்கிறது. இது மாவு மற்றும் கொழுப்புச் சத்துகளைச் செரிமானம் செய்வதற்கு மிகவும் உதவுகிறது. பிறகு வயிற்றில் அமிலம் சுரந்து உணவினைச்

செரிக்கிறது. ஆனால் அவரசமாகச் சாப்பிடுவதால் மூளைக்குச் சென்று அடையும் சமிக்ஞை (சிக்னல்) தடைப்படுகிறது. அத்துடன் வயிற்றில் அதிக அளவு அமிலம் சுரந்து பசியை மேலும் தூண்டுகிறது. இதனால் எந்நேரமும் பசிப்பதைப் போலவே இருக்கும். இதைத் தடுக்க வேண்டுமென்றால் உணவை மெதுவாக மென்று, கூழாக்கிச் சாப்பிட வேண்டும். 'நீரை உண், உணவைக் குடி' என்பது நாம் அன்றாடம் கடைப்பிடிக்க வேண்டிய செயல்களில் மிக முக்கியமான ஒன்று.

**'போதும் என்ற மனமே பொன் செய்யும் மருந்து'**

அடுத்ததாக நாம் உண்ணும் உணவின் அளவைக் குறைத்துக் கொள்ள வேண்டும். ருசியாக இருக்கிறது எனத் தேவைக்கு அதிகமாகச் சாப்பிட்டால் அவ்வுணவினைச் செரிமானம் செய்வதற்கு அதிக நேரம் பிடிக்கும். இதனால் செரிமானக் கோளாறு ஏற்படும். கூடுதலாக நாம் தேவைக்கு அதிகமாக உட்கொள்ளும் உணவு நம் உடலில் கொழுப்புச் சத்தாக மாறி சேமித்து வைத்துக் கொள்ளும். நாளடைவில் நம் உடல் எடையைக் கூட்டிவிடும். ஆகவே உணவை நன்றாக மென்று தின்றாலே நாம் மெதுவாகச் சாப்பிடுவோம். சாப்பாட்டின் அளவும் குறையும். கூடுதலாக வயிறு நிறைவதைப் போல் இருக்கிறது என உணர்ந்தாலே 'போதும்' என அத்துடன் சாப்பிடுவதை நிறுத்திக் கொள்ள வேண்டும். மேலும் உண்ட உணவு செரிப்பதற்கு நிறைய இடைவெளி தந்த பின்னரே அடுத்தவேளை உணவை எடுத்துக் கொள்ள வேண்டும். அப்படிச் செய்தால் மருந்தே நமக்குத் தேவையில்லை. இக்கருத்தைத் திருவள்ளுவரும் மிக அழகாகக் குறளில் சொல்லியிருக்கிறார்.

'மருந்தென வேண்டாவாம் யாக்கைக்கு அருந்தியது
அற்றது போற்றி உணின்'
'அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சாகும்'

இது சர்க்கரைக்கு மிகவும் நன்றாகப் பொருந்தும். நாம் முற்றிலும் தவிர்க்க வேண்டிய ஓர் உணவுப் பொருள் சர்க்கரை. இது ருசியைக் கூட்டுகிறதே தவிர உடலுக்கு எவ்விதச் சத்துக்களையும் தருவதில்லை. சிறிதளவு தானே என்று நம்மை நாமே ஏமாற்றிக் கொள்ள வேண்டாம். ஏனெனில் நாம் உண்ணும் அன்றாட உணவுகளான பால் பொருட்கள் மற்றும் பழங்களிலேயே இயற்கையாகச் சர்க்கரை நிறைந்திருக்கின்றது. முன்பெல்லாம் நாம் சர்க்கரை சேர்த்த பொருட்களைத் தினமுமா சாப்பிட்டுக் கொண்டிருந்தோம்? பண்டிகை, விசேஷம் போன்ற நாட்களில் மட்டுமே சாப்பிட்டுக் கொண்டிருந்தோம். இப்போது எந்தப் பக்கம் திரும்பினாலும் அனைத்திலும் சர்க்கரையின் ஆதிக்கமே. நம் உடலுக்கு எது தேவை என்று நாம் முடிவு செய்து பொருட்களைத் தேர்ந்தெடுக்க வேண்டும். சர்க்கரை நிறைந்த குளிர் பானங்களைக் கண்டிப்பாகத் தவிர்க்க வேண்டும். அமெரிக்க இருதயச் சங்கம் என்ன சொல்கிறது என்றால் தினமும் ஆண்கள் 36 கிராமும் பெண்கள் 25 கிராமும் மட்டுமே சர்க்கரையினைச் சேர்த்துக் கொள்ள வேண்டும். சர்க்கரை அதிகம் உள்ள உணவினை உண்டு வந்தால் உடல் பருமனாக ஆவதோடு, நாளடைவில் நீரழிவு நோய் ஏற்படும் அபாயமும் இருக்கிறது. ஆகவே சர்க்கரையைத் தவிர்ப்பது உடல் எடையைக் குறைப்பதற்கு மட்டுமல்லாமல், சில நோய்கள் நம்மை அண்டாமல் இருப்பதற்கும் வழி வகுக்கிறது.

**'நீரின்றி அமையாது உலகு'**

சங்க இலக்கிய நூலான நற்றிணையில் கபிலர், நீரின்றி அமையாது உலகம் என்று சொல்லியிருக்கிறார். மூன்று நாட்களுக்கு மேல் தண்ணீர் அருந்தாமல் நம்மால் உயிர் வாழ முடியாது. நீர் நம் உடலிலுள்ள கழிவுப்பொருட்களை வெளியேற்றவும் உடலில் உள்ள ஒவ்வொரு பாகமும் சிறப்பாகச் செயல்படவும் பெரிதும் உதவுகிறது. ஆகவே தினமும் நாம் தண்ணீர் அருந்த வேண்டும். பசிப்பது போலிருந்தால் உடனே எதையாவது எடுத்துச் சாப்பிடாமல் ஒரு குவளை தண்ணீர் அருந்துங்கள். அடுத்த நொடியே வயிறு நிறைந்ததைப் போலிருக்கும். அதன்பிறகு சாப்பிட்டால் சாப்பாட்டின் அளவோ, அல்லது, நொறுக்குத் தீனியின் அளவோ கணிசமாகக் குறையும். 2014 இல், இந்தியாவில் நடந்த ஓர் ஆராய்ச்சியில், உடல் எடை அதிகமாக இருக்கும் பெண்கள், காலை, மதியம் மற்றும் இரவு சாப்பிடுவதற்கு அரைமணி நேரத்துக்கு முன்பு 500 மில்லிலிட்டர் தண்ணீர் அருந்திவிட்டுச் சாப்பிட்டனர். இதை எட்டு வாரங்களுக்குத் தொடர்ந்த பின்னர் அவர்களின் உடல் எடை மற்றும் உடலில் உள்ள கொழுப்புச் சத்து கணிசமாகக் குறைந்திருப்பதைக் கண்டறிந்தனர். ஆகவே உடல் எடையைக் குறைக்க நினைப்பவர்கள் இந்த முறையைப் பின்பற்றலாம்.

**'உணவே மருந்து, மருந்தே உணவு'**

உடல் ஆரோக்கியத்துக்கு அனைத்து ஊட்டச்சத்துக்களும் மிக அவசியம். ஆகவே சரிவிகித உணவுமுறையை நாம் பழக்கப்படுத்திக் கொள்ள வேண்டும். உதாரணத்துக்கு, செரிமானத்துக்கு நார்ச்சத்து மிக அவசியம். மாவுச்சத்து நம் உடலுக்கு ஆற்றலைத் தருகிறது. ஒரே வகை உணவை மட்டுமே சாப்பிட்டால் மற்ற ஊட்டச்சத்துகள் நமக்குக் கிடைக்காமல் போய்விடும். ஆகவே உடல் எடைக்கு நல்லதல்ல என்று மொத்தமாக மாவுச் சத்து நிறைந்த உணவைக் குறைத்துவிடாதீர்கள். முழுத் தானியங்களிலும், சோளம், பட்டாணி, முழுக் கோதுமை போன்ற சிக்கலான மாவுச்சத்து (complex carbohydrates) நிறைந்த உணவுகளை எடுத்துக் கொள்ளுங்கள். அதில் நார்ச்சத்து அதிகம் உள்ளதால்

அது குளுக்கோஸாக மாற நிறைய நேரம் எடுத்துக் கொள்ளும். அதனால் உடனே பசிக்காது. அதுமட்டுமல்லாது, புரதம் மற்றும் நார்ச்சத்து நிறைந்த உணவுகள், பழங்கள், காய்கறிகள் என எல்லாவற்றையும் சரிவிகிதமாகச் சாப்பிடுங்கள். இப்படிச் சரிவிகித உணவுப் பழக்கத்தை ஏற்படுத்திக் கொண்டால் தேவையில்லாத எடை உடம்பில் ஏறாது. உடல் எடையும் குறையும்.

### 'உண்டி முதற்றே உலகு'

உணவை வைத்தே உலகம் இயங்குகிறது எனப் பலர் சொல்லிக் கேட்டிருப்போம். அதுவும் சூரிய உதயத்திற்குப் பின்பும் சூரிய அஸ்தமனத்திற்கு முன்பும் உட்கொள்ளும் உணவு ஆயுளை அதிகரிக்கும். இரவில் தூங்குவதற்குக் குறைந்தது இரண்டு மணி நேரம் முன்னரே சாப்பிட்டுவிடுங்கள். அப்படிச் செய்வதால் தூங்குவதற்கு முன்பே உணவுச் செரிமானம் ஆகிவிடுகிறது. இரவில் நல்ல உறக்கமும் கிடைக்கும். தூங்குவதற்கு முன்பு சாப்பிட்டால் நாம் அதிக நேரம் தூங்குவதோடு அடிக்கடி முழிப்புத் தட்டி ஆழ்ந்த உறக்கமும் கிடைப்பதில்லை. தரமற்ற உறக்கம் உடல் ஆரோக்கியத்துக்கு நல்லதல்ல. சராசரியாக ஒருவருக்குத் தினமும் குறைந்தது 7 மணி நேரம் தூக்கம் வேண்டும். தூக்கம் சரியாக இல்லை என்றால் மனம் சோர்ந்து போகும். உடனே மூளை நிறையச் சாப்பிடச் சொல்லிக் கட்டளையிடும். தேவையற்ற நேரத்தில் சாப்பிடும் உணவானது நம் ஆரோக்கியத்துக்குக் கேடு விளைவிக்கும். நம் உடல் எடையைக் கூட்டிவிடும் அபாயமும் உள்ளது. நன்றாகத் தூங்கி எழுந்தால் சுறுசுறுப்புடன் அன்றைய நாளை கழிக்கலாம்.

### 'நீண்ட தூரம் நடப்பவன் நெடுநாள் வாழ்வான்'

நீண்ட தூரம் நடப்பவன் நீண்ட நாட்கள் வாழ்வான் என்ற பழமொழியைக் கேட்டிருப்போம். இதற்காக நாம் அதிகம் மெனக்கெட வேண்டாம். அதிக நேரத்தையும் ஒதுக்க வேண்டாம். எங்கு சென்றாலும் நடந்து செல்லப் பழகிக் கொள்ளுங்கள். அருகில் உள்ள கடைகளுக்குச் செல்லும் பொழுது வண்டியை நாடாமல் நடந்து செல்லுங்கள். உடலும் மனமும் ஒரே சமயத்தில் வேலை செய்யும். புத்துணர்ச்சி கிட்டும். உடல் எடையையும் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வர முடியும். 'உங்களுக்குப் பிடித்த வேலையைத் தேர்ந்தெடுங்கள், அதன்பிறகு வாழ்க்கையில் நீங்கள் ஒரு நாள் கூட வேலை செய்யத் தேவையில்லை' என்று கன்பூசியஸ் சொல்லியிருக்கிறார். இது வேலைக்கு மட்டுமல்ல நாம் செய்யும் அனைத்துச் செயல்களுக்கும் பொருந்தும். பொழுதுபோக்கின் மூலமாகக் கூட நம் உடல் எடையைக் குறைக்கலாம். உங்களுக்குப் பிடித்த வேலையை ஓடியாடிச் செய்யுங்கள். கண்டிப்பாக உங்கள் உடல் எடை குறையும். உதாரணமாக உங்களுக்குத் தோட்டவேலை பிடிக்கும்




என்றால் நேரம் கிடைக்கையில் தோட்டம் அமைத்துப் பராமரியுங்கள். ஒரே இடத்தில் அமர்ந்து கொண்டிருப்பதை விட இது நம் மனதுக்குப் புத்துணர்ச்சியைத் தரும். நல்ல உடற்பயிற்சி மூளைக்கு ஆரோக்கியமானதும் கூட. நடனம் பிடிக்கும் என்றால் நின்று கொண்டு செய்யும் வேலையின் போது இசையைச் சுழலவிட்டு உடலை அசைத்து நடனமாடிக் கொண்டே செய்யலாம். இவை உங்கள் எடையைக் குறைக்க உதவுவதோடு அல்லாமல் உங்களை உற்சாகத்துடனும் வைத்துக் கொள்ள உதவும்.

### மனத் திருப்தி

உணவைச் சிறிய தட்டுகளில் நிறைத்துக் கொண்டு கொஞ்சம் கொஞ்சமாகச் சாப்பிடுங்கள். இது மூளையை ஏமாற்றும் யுக்தி. தட்டு நிறையச் சாப்பிடுகிறோம் என நம் மூளைக்கு உற்சாகம் பிறக்கும். நிறையச் சாப்பிட்ட திருப்தியும் கிடைக்கும். தேவையற்ற கலோரிகள் நம் உடலில் சேராது. பல ஆராய்ச்சிகள் இதை நிரூபித்திருக்கின்றன. அதாவது தட்டின் அளவைப் பாதியாகக் குறைத்ததில் ஒருவர் சராசரியாக 30 சதவிதம் உணவைக் குறைத்துச் சாப்பிட்டிருக்கின்றார். தொடர்ந்து இதைக் கடைப்பிடித்து வந்தால் உடல் எடையும் குறையும்.

### 'சிறுதுளி பெருவெள்ளம்'

பொறுமை நமக்கு மிக அவசியம். எடுத்தவுடன் எடை குறையவில்லை என்று கவலை கொண்டு எதையும் விட்டுவிடாதீர்கள். மறக்க வேண்டாம்... ஒரே நாளில் கட்டப்பட்டதல்ல ரோமபுரி. தொடர்ந்து முயற்சி செய்யுங்கள். கண்டிப்பாக வெற்றி கிட்டும்.

இறுதியாக, கண்டிப்பாகப் பட்டினி கிடந்து உடல் எடையைக் குறைத்துக் கொள்ள முயலாதீர்கள். உடல் எடை தான் குறைந்துவிட்டதே என்று மீண்டும் நீங்கள் தவிர்த்த உணவை எடுத்துக் கொள்ள ஆரம்பித்தால் பிறகு அதிக எடை கூடிடும் அபாயம் உள்ளது. அதுமட்டுமல்லாது உடலுக்குத் தேவையான ஊட்டச்சத்துக் கிடைக்காமல் போய்விடும். அதனால் அளவான உணவைச் சரியான நேரத்தில் நிதானமாக அமர்ந்து சாப்பிட நேரத்தை ஒதுக்குங்கள். முயன்றால் முடியாதது எதுவுமில்லை.




வாழ்வில் வருகுதே முதுமை
இனி வளருமா திறமை
இல்லையே பொறுமை
அதில் வருகுதே வெறுமை

---------------------------

நாடு நாடு என மனம் தள்ள
நாடு விட்டு நான் நாட
நாட்டத்தில் ஆட்டம்
ஆட்டத்தில் கூட்டம்
அதில் ஆர்ப்பாட்டம்
வந்தது வாட்டம்
அதனால் மனதினில் ஓட்டம்
புரிந்தது வாழ்க்கை
தேடுவதில் இல்லை வாழ்க்கை
சும்மா இருப்பதே நிலை
அதுவே நிலையான நிலை
அதில் வருமே மதி
அந்த மதியால் வருமே நிம்மதி
அந்த “தானை” நாடும் “நான்”

கண்ணாடியில் என்னை கண்டேன்
உள் நாடியில் உன்னை உணர்ந்தேன்





**மதுரை நாகி**
**(மெரிலாண்டு)**



REGISTER NOW
வட அமெரிக்கத் தமிழ்ச்சங்கப் பேரவையும்
கேரொலைனா தமிழ்ச்சங்கமும் (RALEIGH, NC)
இணைந்து நடத்தும்
பேரவையின்
38ஆவது தமிழ் விழா
JULY 3, 4 & 5 - 2025
உலக வெளியில்
தமிழ் சினிமா
கதை! கலை!! கலாச்சாரம்!!!
FeIFF
FeTNA INTERNATIONAL
FILM FESTIVAL
சிறப்புத் திரைப்படங்கள் விருதுகள் கௌரவ நிகழ்வுகள்
பேரவையின் முதலாவது சர்வதேச திரைப்பட விழாவில் கலந்து கொள்ளுங்கள்!
உலகெங்கும் உள்ள தமிழ் மனங்களை இணைக்கும் இந்த வரலாற்றுச் சிறப்பு
மிக்க நிகழ்வில் நீங்களும் ஒரு பகுதியாக இருக்க மறக்காதீர்கள்!
To Register: www.fetna-convention.org
Raleigh Convention Center, 500 South Salisbury Street, Raleigh, NC 27601
www.fetna.org | www.fetna-convention.org



நேசிக்கிறோம் ஆனால்
நெருக்குகிறோம்
பாசத்தோடு அழுத்தமும் தரும்

# புதிய தலைமுறை பெற்றோர்!

“எல்லாமே என் பிள்ளைக்கு சிறப்பாக இருக்க வேண்டும்!”

இதுவே இன்றைய பெற்றோர்களின் மனத்தில் பதிந்திருக்கும் மறைக்கப்பட்டக் கனவு! இந்த கனவின் மீது கட்டடமாய் உயர்த்தப்படும் பாசமும் பாதுகாப்பும் சில நேரங்களில் பிள்ளைகளின் வாழ்வை கட்டுப்படுத்தும் கம்பிகளாக மாறுகின்றன.

நாம் ஒவ்வொருவரும் பெற்றோர்களாக மாறும்போது, உள்ளுக்குள் ஒரு பெரிய பொறுப்பு பிறக்கிறது. அதை ஏற்கிறோம், ஆனால் அதே சமயத்தில் அந்த பொறுப்பை முழுமையாக நிறைவேற்ற முடியாமல் போய் விடுவோமோ என்ற அச்சம் நம்முள் வந்து விடுகின்றது. இதனால் தான் ஒரே நேரத்தில் அன்பையும் அழுத்தத்தையும் தரும் பெற்றோர்களாக மாறி விடுகிறோம்.

இன்றைய பெற்றோர், குழந்தைகளின் நலனுக்காக என்று செய்யும் எந்தெந்த செயல்கள் நம்மை சிந்திக்க வைக்கின்றன என்பதை பற்றி ஒரு நேர்மையான பார்வை.

### குழந்தைகளை பிழை செய்ய அனுமதிக்காமல் பாதுகாக்கும் பாசம்

வீழ்வது, தவறு செய்வது, தோல்வி அடைதல், இவை அனைத்தும் குழந்தை வளர்ச்சிகும், வாழ்வறிவுகும் முக்கியமான அடிப்படைகள். ஆனால் இன்றைய பெற்றோர் தன் பிள்ளையை மிகவும் பாதுகாப்பான சூழலில் வளர்ப்பதால் அவர்களின் திறனை வளர்க்கும் வாய்ப்பு குறைவாகவே இருக்கிறது.

இதன் விளைவு?முன்னேற்றம் என்ற சொல் தோல்வியின் மூலம் உருவாகும் என்பதை அவர்கள் அறியாமல் வளர்கிறார்கள்.

### மற்ற குழந்தைகளுடன் ஒப்பிடுதல்

பிறர் குழந்தையை முன்னோக்கி வைத்து நம் பிள்ளையை ஒப்பிடுவது, அவர்களின் நம்பிக்கையை குறைக்கின்றது. ஒப்பீடு வளர்ச்சி தராது, வெறுப்பையும் அழுத்தத்தையும் மட்டும் வளர்க்கும் . ஒவ்வொரு குழந்தையும் தனித்தனி மலர்களைப் போன்றவை. ஒவ்வொன்றும் பூக்கும் நேரம், வாசனை மற்றும் வண்ணம் வேறு. ஒப்பீடு செய்வதற்குப் பதிலாக, ஊக்கமளிக்கத் தொடங்க வேண்டும்.

நம்முடைய கனவுகளை பிள்ளைகளின் தலையில் வைப்பது

சில பெற்றோர்கள், தாங்கள் அடைய முடியாத கனவுகளை பிள்ளைகளின் வாழ்வில் நிறைவேற்ற விரும்புகிறார்கள்.

- என்னால் டாக்டர் ஆக முடியவில்லை , எனவே என் மகன் கட்டாயம் டாக்டர் ஆகவேண்டும்.

- எனக்கு நடனமாட பிடிக்கும் , என் பிள்ளையும் அதைக் கற்றாகவேண்டும் என்று கட்டாயப்படுத்துகிறார்கள்.

பிள்ளைகளுக்கான வாழ்க்கையை அவர்களே தேர்வு செய்யட்டும். நம்முடைய கனவுகள் நமக்கே! பக்கவாதமுற்ற சொந்த கனவுகளால், ஒரு பிள்ளையின் இயல்பு வீணாகிவிட கூடாது.

பெற்றோர்கள் "நான் சொல்வதுதான் சரி” என்று நினைக்கும் மனப்பான்மை

படிப்பில், நடையில், நேரத்தில் என எல்லாவற்றிலும் கட்டுப்பாடு. இன்று, குழந்தைகளுடன் பேசுவதற்கு நேரமில்லை. அதற்குப் பதிலாக:

- “ நான் என்ன சொல்லு கிறேனோ , நீ அதைச்செய்!”
- “நான் சொல்வதுதான் சரி!”

பிள்ளைகள், மனதைத் திறக்க மறுக்கிறார்கள். அவர்களின் உணர்வுகளை வெளிக்காட்ட பயப்படுகிறார்கள். எதிர்காலத்தில், இது மன அழுத்தமாக மாறும். அவர்கள் ஒரு தனி மனிதர்கள் என்பதை நாம் மறந்து விடுகிறோம்.

**கேள்விகளை ஊக்கப்படுத்தாமல் அடக்குவது**

பிள்ளைகள் கேட்கும் கேள்விகள் எளியவையாக இருக்கலாம்:

- “ஏன் வானம் நீலமா இருக்குது?”
- பூமி ஏன் சுற்றுகிறது?”
- “ விமானம் எப்படி பறக்கிறது?”

குழந்தைகளின் கேள்விகள், அவர்களின் அறிவு வளர்ச்சிக்கானா கதவுகள். ஆனால் நாம் பொறுமையாக பதிலளிக்காமல், “ இப்படி கேட்க கூடாது!" அப்படி பேசாதே” என கூறும்போது, அவர்கள் கேள்விகளை பயமாய் நினைக்க ஆரம்பிக்கிறார்கள்.

கேள்விகள் அறிவிற்கானா கதவுகள். அவற்றைத் திறக்கத் தெரியாத பெற்றோர், தானே அறிவை மூடுகின்றனர்.



**வீரா கந்தசாமி**
**நியூயார்க்**

பெற்றோர் என்ற பாத்திரம் மிகப் பெரும் மரியாதைக்குரியது. இன்றைய பெற்றோர் நல்லதே செய்ய நினைக்கிறார்கள். ஆனால் அதிக அக்கறை, அதிக கட்டுப்பாடு, அதிக எதிர்பார்ப்பு, இவை எல்லாம் சில வேளைகளில் நன்மையை விட சுமையாகவே மாறுகிறது.நாம் தவறுகளை உணர்ந்தால்தான், அதை சரி செய்யலாம்.அதைச் சரி செய்தால்தான், அடுத்த தலைமுறை சிறப்பாக மாறும்.

“பிள்ளை வளர்ப்பு என்பது ஒரு அறிவியல் அல்ல, அது ஒரு கலையும் அல்ல

அது ஒரு உணர்வும் பொறுப்பும் கலந்த பயணம் தான்.”



# ஹூஸ்டன் தமிழ்ப்பள்ளிகள்

## ஹூஸ்டன் "சிறகுப் பந்து" விளையாட்டு விழா














## மகளிர் தின விழாவில்











## ஹூஸ்டன் தமிழ்ப்பள்ளிகள்


பியர்லேண்ட் தமிழ்ப்பள்ளி



சுகர்லேண்ட் தமிழ்ப்பள்ளி


கேட்டி தமிழ்ப்பள்ளி


உட்லேண்ட்ஸ் தமிழ்ப்பள்ளி


வெஸ்ட் கேட்டி தமிழ்ப்பள்ளி


வெஸ்ட் ஹூஸ்டன் தமிழ்ப்பள்ளி

# மில்வாக்கி மாநகர தமிழ்ச் சங்கம்




GREATER MILWAUKEE TAMIL SANGAM

மில்வாக்கி மாநகர தமிழ்ச்சங்கம்

அறம் செய்














# டென்னசி தமிழ்ச்சங்கத்தின் சித்திரைத் திருவிழா

டென்னசி தமிழ்ச்சங்கத்தின் சித்திரைத் திருவிழா, மே 24, 2025 அன்று, ஃப்ராங்க்ளின் நகரில், கோலப்போட்டி, பூ கட்டும் போட்டி, தமிழ்ப் பண்பாட்டு கலை இலக்கிய நிகழ்வுகள், திரு இளஞ்செழியன் அவர்களது தலைமையில் பட்டிமன்றம், அறுசுவை வாழையிலை விருந்து முதலானவற்றுடன் சிறப்பாக இடம் பெற்றது. விழாவில், இந்திய ஒன்றியத்தின் முன்னாள் மாண்புமிகு அமைச்சர் திரு நெப்போலியன் அவர்கள், சங்கத்தின் நிறுவன உறுப்பினரும் வட அமெரிக்கத் தமிழ் ஆளுமையுமான முனைவர் வி.ஜி.தேவ் அவர்கள், வட அமெரிக்கத் தமிழ்ச்சங்கப் பேரவைத் தலைவர் திரு விஜய் மணிவேல் அவர்கள், பேரவையின் துணைத்தலைவர் திரு எழிலன் இராமராசன் அவர்கள், தமிழ்ச்சங்க நிர்வாகிகள், முன்னணியினர் உள்ளிட்ட ஏராளமானோர் கலந்து கொண்டனர்.

விழாவுக்கு வருகையளித்திருந்த விருந்திநர்களை, சங்கத்தலைவர் திரு இராஜா பழனிவேல், செயலாளர் திரு ஸ்ரீனிவாசன் குமரேசன், துணைத்தலைவர் திரு சுரேஷ்குமார் நடேசன் முதலானோர் வரவேற்றுச் சிறப்புச் செய்தனர். விழாவில் பேசிய விருந்திநர்கள் உயர்திரு நெப்போலியன், முனைவர் வி.ஜி.தேவ் ஆகியோர் பேரவையின் முக்கியத்துவம், ஆதரவு,




தமிழர்களின் மேன்மை ஆகியவற்றை வலியுறுத்தியும் வாழ்த்துரைத்தும் பேசினர். பேரவையின் தலைவர் திரு விஜய் மணிவேல் அவர்களும், துணைத்தலைவர் எழிலன் இராமராசன் அவர்களும், பேரவையின் பணிகள், பேரவை விழா குறித்த தகவல்கள், டென்னசி தமிழ்ச்சங்கத்தின் ஆதரவு முதலானவற்றை விரித்துரைத்தும், பேரவை விழாவுக்குத் திரளாக வந்திருந்து சிறப்பிக்குமாறும் வேண்டிக் கொண்டனர். தொடர்ந்து, போட்டிகள், வாழையிலை விருந்து, நன்றி பாராட்டுதலென விழா இனிதே நிகழ்வுற்றது.



# சியாட்டல் தமிழ்ச் சங்க நிகழ்ச்சிகள் – 2025

### பொங்கல் விழா

சியாட்டல் தமிழ்ச் சங்கத்தில் தலையாயது பொங்கல் விழா நிகழ்ச்சி. கதிரவனையும் , உழவரையும் நன்றி பாராட்டும் விதமாக அறுவடை நாளாம் தைத்திருநாளை ஏழு கடல் தாண்டி இங்கே பெருவிழாவாக கொண்டாடி மகிழ்ந்தோம். அந்நாளில் பல குடும்பங்களை இணைத்து, உறவுகளை புதிப்பித்து, உணர்வுகளை பகிர்ந்து, உணவுகளை ருசித்து மகிழ்ந்தோம். செவிக்கு இனிய பாடலையும், கேட்போரை மயக்கும் இன்னிசையும், அரங்கத்தில் இருந்த அனைவரையும் பாடகராக்கிய தருணமும் அங்கு சிறப்பு விருந்தினராக வந்திருந்த பாடகர் திரு. சத்யா அவர்களையே சாரும். வாய் விட்டு சிரித்தாள் நோய் விட்டு போகும் என்ற பழமொழிக்கு ஏற்ப அரங்கத்தை கலகலப்பாகி தன் பலகுரல் பேச்சாலும் நகைச்சுவை கருத்தாலும் அங்கிருந்த அனைவரையும் அதிர வைத்த திரு. நவீன் அவர்களின் நிகழ்ச்சி மிகவும் அருமையாக இருந்தது. சங்க மக்கள் அனைவரும் அன்றைய நாளில் நடந்தவற்றை எல்லாம் கண்டும் , கேட்டும் , ரசித்தும் மனநிறைவோடு தைத்திருநாளை கொண்டாடினோம்.

### மகளிர் தின விழா

தாயின் கருவறையில் ஒன்பது மாதங்கள் இருந்து நாசா விண்வெளியில் ஒன்பது மாதங்கள் மிதந்து நாடெங்கும் தன் திறமையால் நன்மையை மட்டுமே செய்யும் நங்கையாய் சீரி எழும் சிங்கமான அணைத்து மகளிரையும் கொண்டாடும் விதமாக சியாட்டல் தமிழ்ச் சங்கத்தினால் மகளிர் தினம் கொண்டாடப் பட்டது. அவ்விழாவில் தன் திறமைகளை வெளிப்படுத்த நடத்தப்பட்ட குழு விளையாட்டுகளும், நம் சங்கப்பெண் களின் சிங்கார நடையும் மற்றும் அவர்களுடைய காண்போர் வியக்கும் நடன நிகழ்ச்சியும் மேலும் விழாவை சிறப்பாக்கின. இவ்வாறு அன்றைய நாள் மிகவும் மகிழ்ச்சியாகவும், குதூகலத்தோடும் மங்கையர்களை மனம் மகிழச் செய்தது.





# தன்னிகரில்லாத் தமிழ்

முன்தோன்றிய மூத்தகுடிகளின் முதல் மொழியாம் தமிழ்
செழுமையும் இனிமையும் நிறைந்த செம்மொழியான தமிழ்
இயற்றமிழ் இசைத்தமிழ் நாடகத்தமிழ் என முத்தமிழான தமிழ்
மழலை மனம் மாறா மகிழ்வின் மொழி தமிழ்
தாயாய் எனை அணைக்கும் தமிழ்
காதலுடன் எனை மயக்கும் தமிழ்
கவியாய் எனை உயிர்ப்பிக்கும் தமிழ்
தமிழனாய் எனை உயர்ப்பிக்கும் தமிழ்
தலை நிமிர்ந்தென்னை நடத்தும் தமிழ்
உலகப்பொதுமறை கொடுத்தது எந்தன் தமிழ்
வள்ளுவம் தந்த வான் புகழ் தமிழ்
சிலப்பதிகாரம் தந்த சிந்தனைத் தமிழ்
அவ்வைப்பாட்டியின் அமுது தமிழ்
பாரதி கண்ட புரட்சித் தமிழ்
பாரதிதாசன் கையில் பாங்குடன் தமிழ்
முதல் இடை கடை என சங்கங்கள் கொண்ட தமிழ்
மூவேந்தர் கடல் கடந்து கொடி நாட்டிய தமிழ்
வியத்தகு விஞ்ஞானம் வழங்கிட்ட தமிழ்
விருத்தங்களுடன் பல பொருத்தங்களான தமிழ்
கணித மேதைதனை தந்திட்ட கன்னித் தமிழ்
உணர்வாய் உருவாய் எனதுயிராய் எனது அன்னைத் தமிழ்
இதோ இன்று உங்களையும் என்னையும் இணைத்த நம் நற்றமிழ்
வாழும் வாழ்த்தும் வளரும் என்றும் தன்னிகரற்ற தமிழ்



**-நாகராஜன் ராஜேந்திரன்**







# சிந்தைக்கு மட்டுமில்லாமல் வயிற்றுக்கும் உணவளித்த அன்னையர் தினம்

அன்பிற்கினிய வடஅமெரிக்க தமிழ்ச் சொந்தங்களே, இனிய வணக்கம்!

பொன்விழா காணும் மிச்சிகன் தமிழ்ச் சங்கம் இந்த ஆண்டு மார்ச் முதல் மே வரை நடத்திய நிகழ்வுகளை இங்கே தொகுத்திருக்கின்றோம்.

### மார்ச் மாத நிகழ்வுகள்:

மிச்சிகன் தமிழ்ச் சங்கம் மார்ச் மாதத்தை மகளிர் மாதமாக அறிவித்து, மகளிற்கான சிறப்பு நிகழ்ச்சிகளை முன்னெடுத்தது.

#### மார் 30 : மகளிர் எறிபந்து போட்டி

முதல் நிகழ்ச்சியாக மார்ச் மாதம் 8-ம் நாள் உலக மகளிர் தின சிறப்பு பேச்சரங்கம் இணைய வழியில் சிறப்பாக நடந்தது. அடுத்த நிகழ்ச்சியாக MTS விளையாட்டுக் குழு சார்பில் மார்ச் மாதம் 30-ம் நாள் மகளிர்க்கான எறிபந்து போட்டி பாண்டியாக் நகரில் உள்ள UWM உள்விளையாட்டு அரங்கில் நடைபெற்றது. மிச்சிகன் மட்டுமில்லாமல் பக்கத்து மாகாணங்களில் இருந்தும் அணிகள் கலந்து கொண்டன. மொத்தம் எட்டு அணிகள் கலந்து கொண்ட இந்த போட்டி இறுதி வரை விறுவிறுப்பாக நடைபெற்று, முதல் இரண்டு இடங்கள் பெற்ற அணிகளுக்கு கோப்பைகளும்

மற்றவர்களுக்கு சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. பெண்களின் பேராதரவுடன் நடைபெற்ற இப்போட்டி மேலும் இது போல பல போட்டிகள் நடத்த தூண்டுதலாக இருந்தது.

### ஏப்ரல் மாத நிகழ்வுகள்:

ஏப்ரல் 20: சித்திரையில் முத்திரை பதிக்கும் வண்ணம் ஏப்ரல் மாதம் 20-ம் நாள் MTS குறும்படக் கலைக்குழு துவக்க விழா சிறப்பாக நடந்தது. இணைய வழியாக நடந்த இந்நிகழ்ச்சியில் கலையுலக ஆளுமைகள் இயக்குனர் திரு.செல்வக்கண்ணன், ஒளிப்பதிவாளர் திரு. வினோத் ரத்தினசாமி மற்றும் படத்தொகுப்பாளர் திரு. காசி விசுவநாதன் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர். பெருவாரியாக கலந்து கொண்ட அனைவருக்கும் தங்கள் வாழ்த்துகளையும், தங்கள் அனுபவங்களையும் பகிர்ந்து கொண்டனர். இது நிகழ்ச்சியில் கலந்து கொண்ட அனைவருக்கும் உற்சாகத்தையும், உத்வேகத்தையும் கொடுத்தது என்பது மிகையில்லை.

### மே மாத நிகழ்வுகள்:

மே 11: மிச்சிகன் தமிழ் சங்கம் தனது பொன்விழாவினை கொண்டாடி வரும் இந்த தருணத்தில் மற்றுமொரு முன்னெடுப்பாக மிச்சிகன் வாழ் தமிழ் தொழில் முனைவோர்களை ஒன்றிணைக்கும் விதமாக MiTEN என்ற அமைப்பை உருவாக்கி உள்ளது. இந்நிலையில் MiTEN அமைப்பின் சார்பில் தொழில் முனைவோர்களை சந்திக்கும் நிகழ்வாக ஒரு நிகழ்ச்சியை மிச்சிகன் தமிழ்ச் சங்கம் சவுத்பீல்ட் நகரில் நடத்தியது. இந்த நிகழ்வில் சிறப்பு பேச்சாளராக பிரபல சொற்பொழிவாளர் திரு. மணிகண்டன் கலந்து கொண்டு பார்வையாளர்களை சிரிக்கவும், சிந்திக்கவும் வைத்தார்.

அன்று அன்னையர் தினமாகவும் இருந்தமையால் அன்னையர் பற்றி அவர் பேசிய குறிப்புகள் எல்லோரையும் நெகிழ்ச்சி அடைய செய்தது. சிந்தைக்கு மட்டுமில்லாமல் வயிற்றுக்கும் உணவளித்து இந்த நிகழ்ச்சி மகிழ்வுடன் நிறைவுற்றது.






Michigan Tamil Sangam
சித்திரையில் முத்திரை பதிக்கும்
MTS
MTS
குறும்படக் கலைக்குழு
தொடக்க நிகழ்ச்சி
நாள் : ஏப்ரல் 20,
ஞாயிற்றுக்கிழமை
காலை 10.30
(அமெரிக்க கிழக்கு நேரம்),
குழுவைத் தொடங்கி வைக்கும் கலை ஆளுமைகள்:
Director SELVAKANNAN
Cinematographer VINOTH RATHINASAMY
Editor KASI VISWANATHAN
Event Coordinators:
LIVE zoom
LIVE STREAMING


MTS Short Film Group Inauguration
Michigan Tamil Sangam
kasi vishwanathan
Michigan Tamil Sangam
Kirikujalambal T
Vignesh VK
DETROIT
JK (JM cinema productions Ltd)
vijay
Vinoth Rathinasamy
zoom


தமிழ்ச்சங்கம் மிச்சிகன்
TAMIL SANGAM MICHIGAN


மிச்சிகன் தமிழ்ச் சங்கம்
MICHIGAN TAMIL SANGAM
Let's Meet & Laugh
28275, Telegraph Road, Southfield, MI 48034
சந்திப்போம்! சிரிப்போம்!! சிந்திப்போம்!!!
சொற்பொழிவாளர்
P.மணிகண்டன்
MAY 11 SUNDAY
11.00am
(90 mins)
Contac
Rajakumari Raja
(802 373 971
Kiri Kujalaampa
(248 565 562
"Lunch will be provided"
தமிழால் ஒன்றிணைவோம்...
செயலால் வென்றிடுவோம்...
www.mitamilsangam.org






# நட்பின் நிழலில் ஒரு வாழ்வு



**இந்துமதி ஜெயபால்**

சினேகாவும் மதியும் நல்ல தோழிகள். அவர்கள் அம்மாக்கள் கவிதாவும் பாரதியும் இருவருமே திருமணம் ஆகி அமெரிக்காவின் சான் ஜோசே நகரில் வசித்து வந்தார்கள். அவர்கள் அம்மாக்கள் இருவரும் நல்ல நட்புடன் இருந்ததால், சினேகாவும் மதியும் சிறுவயது முதலே நல்ல நண்பர்கள் ஆனார்கள்.

மதி பள்ளி முடித்ததும் கணிதவியல் பாடத்தைக் கல்லூரியில் படிக்க முடிவு செய்தாள். சினேகா, கணினி பொறியியல் படிக்கக் கிடைத்த வாய்ப்பை விட்டுவிட்டு, மதியைப் பிரிய மனமில்லாமல், மதியுடன் கணிதவியல் பாடம் படிக்க முடிவு செய்தாள். இதில் சினேகாவின் தந்தை ரகுவிற்கு துளியும் விருப்பம் இல்லை. அவள் தாய் பாரதியும் எவ்வளவோ எடுத்துச் சொன்னாள்.

மதியும், மதியின் பெற்றோரும் கூட “வரும் வாய்ப்பை தவறவிடாதே!” என்று சினேகாவிற்கு அறிவுறுத்தினார்கள். ஆனால் சினேகா எவருடைய பேச்சையும் கேட்கவில்லை. மதியுடன் படிக்கவே விருப்பம் கொண்டாள். இறுதியில் வேறு வழியில்லாமல் அரை மனத்துடன் பாரதியும் ரகுவும் ஒத்துக்கொண்டார்கள்.

அவர்கள் இருவரும் கல்லூரியில் சேர்ந்தார்கள். அவர்கள் இரண்டாம் ஆண்டு கணிதவியல் படித்து கொண்டிருந்தார்கள். அப்போது கவின், அவனது தந்தை வேலுவின் பணி மாற்றம் காரணமாக அதே கல்லூரியில் சேர்ந்தான்.

கவின் வகுப்பறையில் நுழைந்ததும், அவனது கண்களில் முதலில் பட்டது மதி தான். அவளைப் பார்த்தவுடன் அவனுக்கு மிகவும் பிடித்திருந்தது. சினேகா அவனைப் பார்த்ததும், பக்கத்தில் இருந்த மதியிடம், “ஏய், அவனைப் பாரேன். ரொம்ப ஸ்மார்ட்டா இருக்கான் இல்லையா?” என்று சொன்னாள். மதி, “ஆமாம், நல்லாத்தான் இருக்கான்” என்றாள்.

கவின் அவர்கள் பக்கத்தில் இருந்த மேஜையில் அமர்ந்தான். வகுப்பில் ஆசிரியர் பாடம் நடத்திக் கொண்டிருக்க, அவன் கண்கொட்டாமல் மதியையே பார்த்துக் கொண்டிருந்தான். மதி, முதலில் பார்த்ததோடு சரி, பிறகு அவனைப் பார்க்கவேயில்லை. ஆனால் சினேகா, கவின் மதியை நோட்டமிடுவதைப் பார்க்கத் தவறவில்லை. சினேகா பார்ப்பதை அறிந்த கவின், சட்டென்று அவன் பார்வையைக் கரும்பலகை மீது

செலுத்தினான். தினம் தினம் இதே கதையாகிப் போக, ஒருநாள் சினேகா மதியிடம், “கவின் உன்னை காதலிக்கிறான் என்று நினைக்கிறேன் மதி” என்று சொன்னாள். அதற்கு மதி, “எனக்கு அப்படி ஒரு துளி எண்ணமும் இல்லை” என்றாள். அதைக் கேட்டவுடன் சினேகாவிற்கு, மதி அவனை விரும்பவில்லை என்பதற்காக புரிந்தது.



கவின் மெதுவாக மதியிடம் பேச முயன்றான். ஆனால் அவள் பிடிக் கொடுத்து பேசவில்லை. அதனால் அவன் சினேகாவிடம் நட்புடன் பேசத் தொடங்கினான். சினேகாவும், தன் தோழியை அவன் காதலிப்பதால், அவனிடம் பேசினாள். அவன் எவ்வளவோ முயன்றும், அவனை மதி ஏறெடுத்துப் பார்க்கவில்லை. சினேகா கூட அவனுக்காக தூது சென்றாள். இருந்தும், மதி அவன் காதலுக்குச் சம்மதிக்கவில்லை.

மதியும் சினேகாவும் முதுகலை கணிதவியல் பாடம் எடுத்து தொடர்ந்து படித்தார்கள். அப்போது கவின் தந்தைக்கு மறுபடியும் பணி மாற்றம் வந்ததால், அவர்கள் இந்தியாவிற்குச் செல்ல நேர்ந்தது. அப்போதும் கவின், மதியிடம் கடைசியாக, “தன்மேல் விருப்பம் இருக்கிறதா?” என்று கேட்டான். “தனக்கு அவன் மீது எந்த வித அபிப்பிராயமும் இல்லை” என்று மதி உறுதியாகச் சொன்னாள். அவனால் அவளது பதிலை ஏற்றுக்கொள்ள முடியவில்லை.

அவன், “என்ன, என்னிடம் உனக்கு பிடிக்கவில்லை? சொல்! நான் என்னை மாற்றிக்கொள்கிறேன்” என்று மன்றாடினான். அதற்கு மதி, “அது அப்படி இல்லை கவின். உன்னை எனக்கு பிடிக்கும், ஆனால் எனக்கு உன்மேல் காதல் இல்லை” என்று உறுதியாகச் சொன்னாள்.

அப்படியே கல்லூரி முடிந்து, இருவரும் தங்கள் படித்த கல்லூரியிலேயே கணித ஆசிரியர்கள் ஆனார்கள். இந்த நிலையில், மதிக்கு அவள் பெற்றோர் மாப்பிள்ளை பார்த்துக் கொண்டிருந்தார்கள். மதியின் தந்தை ராம், அமெரிக்காவில் வசிக்கும் ஒரு இந்திய மாப்பிள்ளையை பார்த்தார். ராமின் நண்பன் கணேஷின் மகன் சித் கணினி மென்பொருள் துறையில் கிரீன் கார்டுடன் இருந்தான். அவனின் ஜாதகம் மதிக்குப் பொருந்தியது. இதைப் பற்றி மதியிடம் கூறி, பெண் பார்க்கும் நிகழ்வை ஏற்பாடு செய்ய முயன்றார். ஆனால் மதி “தனக்குத் திருமணமே வேண்டாம்” என்று மறுத்துவிட்டாள்.

அதே சமயம், சினேகாவின் அத்தை மகன் ராகுல், படிப்பு முடித்து, கணினித் துறையில் வேலை செய்ய சினேகா வீட்டில் வந்து தங்கினான். அவன் வந்தது முதல் சினேகாவிடம் மிகுந்த அன்புடன் பழகினான். இதைக் கண்ட அவளது அப்பா ரகு, எப்படியாவது தன் அக்கா மகன் ராகுலுக்கு மகள் சினேகாவைத் திருமணம் செய்து வைக்க விரும்பினார். இதை தன் அக்காவிடமும், அவளது கணவரிடமும் நேரடியாகவே கேட்டார். அவர்களும், “சம்மதமே” என்று உடனே ஒத்துக்கொண்டார்கள்.

சினேகாவின் தந்தை, தன் மனைவி பாரதியிடம் சொன்னபோது, பாரதியும், “தனக்கும் அதில் விருப்பமே” என்று கூறினாள். ஆனால் சினேகா, "தனக்குத் திருமணத்தில் இஷ்டம் இல்லை" என்று வீட்டில் தெரிவித்தாள். அதை கேட்ட அவள் பெற்றோர் மிகுந்த அதிர்ச்சியில் ஆழ்ந்தார்கள். “என்ன, நமக்கே வாரிசு இல்லாமல் போய்விடும்” என்ற பயத்தில், எப்படியாவது அவளை திருமணத்திற்கு சம்மதிக்க வைக்க முயன்றார் கள். ராகுலையும் வைத்து அவளிடம் பேசினார்கள். அப்போதும் அவள் பிடிக்கொடுக்கவில்லை.

பாரதி, “யாரையாவது விரும்புகிறாயா? இருந்தால் சொல். அதற்கும் எங்களுக்குச் சம்மதமே” என்று கூறி பார்த்தாள். இருவரின் பெற்றோரும் எவ்வளவோ எடுத்துச் சொன்னாலும், இருவரும் திருமணத்திற்கு சம்மதிக்கவில்லை. “திருமணம் எதற்கு?” என்று இருவரும் கேட்டார்கள். “வாழ்க்கையில் ஒரு துணை வேண்டுமல்லவா?” என்று இருவரின் பெற்றோரும் கேள்வி கேட்டார்கள்.

“துணைதானே... எனக்குச் சினேகா துணை. அவளுக்கு நான் துணை,” என்று மதி உறுதியாகச் சொன்னாள்.

சினேகாவும், “ஆண்தான் என்றும் பெண்ணுக்குத் துணை என்பதை மாற்றுவோம். பெண்ணுக்குப் பெண்ணும் துணைதான். திருமணம் மட்டும் என்றும் நிரந்தரமானது என்று சொல்ல முடியாது. நட்பும் என்றும் நிரந்தரமானதுதான்,” என்று சொன்னாள்.

“இந்த காலத்தில் பெண்கள், நாங்கள் எல்லோரும் தனித்து வாழும் அளவுக்குப் பொருளாதார ரீதியிலும் உயர்ந்திருக்கிறோம். அது மட்டுமல்ல, தனியாக வாழ தன்னம்பிக்கையும், தைரியமும் எங்களிடம் நிறையவே இருக்கிறது” என்று இருவரும் உரக்கச் சொன்னார்கள்.

அவர்களின் மன உறுதியைக் கண்ட இருவரின் பெற்றோரும், “சரி, உங்கள் வாழ்க்கை உங்கள் கையில்” என்று அவர்கள் விருப்பத்திற்கு இசைந்தார்கள்.

# யூட்டா தமிழ்ச் சங்கம் மற்றும் யூட்டா தமிழ் அகாடமி

# தமிழ்த்திருநாள் பொங்கல் விழா 2025

அமெரிக்காவின் யூட்டா மாநிலத்தில் தமிழர்கள் தங்கள் பண்பாடு, மரபுகளை காக்கவும், கொண்டாடவும் யூட்டா தமிழ்ச் சங்கம் மற்றும் யூட்டா தமிழ் அகாடமி சிறப்பான நிகழ்வுகளை நடத்தி வருகிறது. 2025ஆம் ஆண்டு பொங்கல் விழா, தமிழ்த்திருநாளை முன்னிட்டு மிகச் சிறப்பாக கொண்டாடப்பட்டது. இந்த விழாவில் பல்வேறு போட்டிகள், கலாச்சார நிகழ்ச்சிகள், மற்றும் பாரம் பரிய உணவுகளின் விருந்தோம்பல் நடைபெற்றது.

### நிகழ்வின் சிறப்பம்சங்கள்

- பொங்கல் பானை வைத்து கொண்டாடல் – யூட்டா தமிழ்ச் சங்கம் மற்றும் யூட்டா தமிழ் அகாடமி பாரம்பரிய பொங்கல் பானையை உருவாக்கி, விழாவின் மையக்காட்சியாக அமைத்தது. பாரம்பரிய முறையில் பொங்கல் வைத்து, தெய்வ வழிபாடு மற்றும் சமூக ஒன்றிப்பாட்டை வலியுறுத்தியது.
- கலை நிகழ்ச்சிகள் – சிறுவர்களும் பெரியவர் களும் பங்கேற்ற நடன, இசை மற்றும் நாடக நிகழ்ச்சிகள்.
- சிறுதானிய பாரம்பரிய உணவு சமையல் போட்டி – ஆரோக்கியமான பாரம்பரிய உணவுகளை ஒவ்வொருவரும் தயாரித்து, தங்கள் திறமைகளை வெளிப்படுத்தினர்.
- திருக்குறள் போட்டி – சிறுவர்கள், மாணவர்கள் திருக்குறளை சொல்லி, அதன் அர்த்தத்தையும் விளக்கி தங்கள் மொழித் திறனை வெளிப்படுத்தினர்.
- செய்யுள் ஒப்புவித்தல் – பாட்டெழுதிய தமிழர்களின் செய்யுட்களை






"யூட்டா தமிழ்ச் சங்கம் - புதிய நிர்வாகக் குழு 2025 - வலமிருந்து இடமாக (நடுவர் - சதீஷ் கோபாலன், தலைவர் - சுப்ரமணியபெருமாள் திருநாவுக்கரசு, துணைத் தலைவர் - திலீபன் சுப்ரமணியன், செயலாளர் - விஜய் கிருஷ்ணமூர்த்தி, இணைச் செயலாளர் - ஓம் ராமநாதன், பரத் குமார், பொருளாளர் - ரவிசங்கர் பாலூ, இணைப் பொருளாளர் - திரு முருகன்)"

கண்டறிந்து, அவற்றைப் பொருத்தும் போட்டி நடைபெற்றது.

- பேச்சரங்கம் - தமிழ்க் கலாச்சாரத்தின் முக்கியத்துவத்தை எடுத்துரைக்கும் விதமாக பேச்சுப் போட்டி நடைபெற்றது.
- முன்னணி கலை நிகழ்ச்சிகள் - பாரம்பரிய மற்றும் சமகால தமிழ் இசை, நடன நிகழ்ச்சிகள் அனைவரையும் மகிழ்ச்சிக்குள் ஆழ்த்தின.

### விழாவின் மகிழ்வான தருணங்கள்

இந்த விழா, அமெரிக்காவில் வாழும் தமிழர்களுக்கு தமிழர் திருநாளின் உண்மையான அர்த்தத்தையும், சமூக ஒற்றுமையை வளர்க்கும் ஒரு மேடையாக அமைந்தது. அனைவரும் ஒற்றுமையாக பங்கேற்று, தமிழ்ச் சங்கத்தின் வழியாக தங்கள் பாரம்பரியத்தை வாழவைத்தனர்.

தமிழ் மொழியின் இனிமையை, பண்பாட்டின் செறிவை, மற்றும் பாரம்பரிய உணவுகளின் மகத்துவத்தை ஒருங்கே கொண்டாடிய இந்த விழா, யூட்டா தமிழ்ச் சங்கத்தினரின் மகிழ்ச்சியான நிகழ்வாக அமைந்தது!

# விஸ்கான்சின் தமிழ்சங்கம்

சித்திரை திருநாளை விஸ்கான்சின் தமிழ்சங்கம் சித்திரையை வரவேற்று பாரம்பரிய முறையில் உணவு திருவிழாவாக கொண்டாடுகிறது. வாழை இலை விருந்து நிகழ்வாக கடந்த 23 வருடமாக ஒவ்வொரு ஆண்டும் கொண்டாடுகிறது.

விஸ்கான்சின் தமிழ்ச்சங்கத்தின் மற்றொரு நிகழ்வாக ஏப்ரல் 26 அன்று விஸ்கான்சின் பல்கலைக்கழக மாணவர்களுக்கான உணவு கொடை நிகழ்வை நடத்தியது. தமிழ்ச்சங்க உறுப்பினர்களும், தன்னார்வலர்கள் கொண்டுவந்த உணவை உறுப்பினர்களும், தன்னார்வலர்களும் இணைந்து இந்திய மாணவர்களுக்கு வழங்கினார்.

## வாழை இலை விருந்து










# மாணவர்களுக்கு உணவு வழங்குதல்







**ரிதுல் ராஜு,**

**மினசோட்டா தமிழ் சங்கம்**



# கொஞ்சம் பொறு.. பூக்களும் பூக்கும்!

கடிகார முட்களெல்லாம்
கருணையின்றிக் கிழிக்கும்
அது துளியும் நகராமல்
துரோகமொன்றை இழைக்கும்

இரவின் காரிருள்
முடியாமல் நீளும்
இதயத்தின் பேரிரைச்சல்
இம்சையாகத் தோன்றும்

சுவாசிக்கும் காற்றெல்லாம்
பாரமாக மாறும்
சிறைபட்ட நுரையீரல்
வேலைநிறுத்தம் கோரும்
மன அழுத்தம் உண்மை தான்

உணர்வுகள் நிரம்பக் கவிதை
வடிக்கும் கர்வமுண்டு..
உன் நிழல் கண்டதும்
சொற்கள் கலைந்துவிடுகின்றன...
மனமுணராததை விழிகள் காண்பதில்லையாம்
காலைப் பனி வேண்டுவதெல்லாம்
கதிரவன் கிரணங்கள்
கரையும் வரை நீடிக்கும்
துளி இன்பம் போதும்

சில சொற்கள் கனமானவை
நுழைவது என்னவோ காதுகளில்
வாழும் வரை விழுங்கிவிட முடிவதேயில்லை
தொண்டைக்குழிக்குள் விக்கி
அங்கேயே நிலை கொள்ளும்

மனம் எனும் மிருகம்
உயிர் தின்ன அலையும்
எண்ணங்களில் வெறிகொண்டு
தன் குருதி குடித்துத் திரியும்

காலமெனும் அருமருந்து
கனிவுகொண்டு நகர வேண்டும் – அதுவரை
யார் கண்களிலும் படாதபடி
நான் காற்றோடு கரைய வேண்டும்

என் நெஞ்சு சுட்ட சொற்களெல்லாம்
இல்லையென்றாக வேண்டும்
அது வரைந்துபோன வடுக்களெல்லாம்
நினைவினின்றகல வேண்டும்

உமியளவு நிழல் கண்டாலும்
உறைந்து மறையும் கண்ணீர் வேண்டும்
வலிகளின் தடயம் மறைக்குமோர்
வலுமிகு புன்னகை வேண்டும்

தவிர்க்கமுடியா விழாக்களில்
என் தலை தப்ப வேண்டும்
சிக்கிக்கொண்டு தவிக்கும்போது
சிவந்து வடியாத கண்கள் வேண்டும்



# ரேவதி ராஜு

ஓலமிட்டுக் கதற
ஆள் அரவமற்ற அறை வேண்டும்
அழுது முடித்துப் பற்றிக்கொள்ள
என்னவர்களின் கரம் வேண்டும்

விமர்சனங்களுக்கு அப்பாற்பட்ட
விளங்கவைக்க அவசியமற்ற
அன்பை மட்டுமே அள்ளித்தரும்
என்னவர்களின் கரம் வேண்டும்

விரக்தியின் ஆழம் விழுந்தும்
பிடித்து எழ வேர் வேண்டும்
உயிரெழுத்துகள் மாண்ட பின்னும்
மௌனங்கள் மனமுரைக்க வேண்டும்

நாம் அன்பு கொண்ட முகங்களில்
வெறுப்பொன்று எதிர்ப்படுமெனில்
விருப்புற்றுத் தவிர்க்க வேண்டும் -
வெறுமையிலும் வலிமை வேண்டும்

தொண்டையில் விக்கி நிற்கும் துன்பத்தை
தொலைவில் தெரிபவர்
உரையாட வரும் முன் எப்படியேனும்
முழுதாக விழுங்கிவிட வேண்டும்

நத்தைக்கூட்டிற்குள் நுழைந்தபடி
நான் மட்டும் இருக்கின்ற
தனிமை வேண்டும்
ஐயோ...
முரண்பட்டுக் கொண்டிருக்கும்
ஆழ் மனதிடமிருந்து தப்ப
ஓரிருவர் உரையாடி என்
தனிமை கலைக்க வர வேண்டும்
இல்லை...
இந்தக் குறுநகை சிறிது நேரம் கூட
தாக்குப் பிடிக்காமல்
உதிர்ந்துவிடப் போகிறது...
விபரீத எல்லைக்குள்
இழுத்துச் செல்லாத அளவு
தனிமையே மீண்டும்
தற்காக்க வர வேண்டும் !

இயல்பை மீட்டெடுக்க உதவும்
இலகுவான புன்னகை தரும்
எதுவாயினும் அதுவே வேண்டும்.

இரத்தமும் சதையுமென
எனக்காய்த் துடிக்கும் இந்த இதயம்
கரிசனமும் காதலும் என்றும்
வழிந்தோடும் இந்த இதயம்
வெறுப்பையும் வஞ்சத்தையும்
துளியும் சுமக்க மறுக்கும்
இந்த இதயம்
தனக்கு முன் பிறரை சிந்திக்கும்
என் இனிய இதயம்
அழுத்தங்களை அமைதியாய்க்
கடக்க வேண்டும்

காலமெனும் அருமருந்து
கனிவுகொண்டு நகர வேண்டும்
அதுவரை அழுத்தங்களை மனம்
துணிவுகொண்டு தகர்க்க வேண்டும்
பூகம்பம் தாக்கிய அதே பூமியில் தானே
பூக்களும் பூக்கிறது !





# ஆற்றங்கரை அரசமரம்

யுகம் யுகமாய் தவம் செய்து சாகாவரம் பெற்றவன் போல் பன்னூற்றாண்டு கடந்து தொண்ணூறு அடி தொட்டு நிற்கும் விருட்சம் நான். என் நிழல் தேடி வருவோர்க்கு வார்த்தையில்லாக் கதைகள் பல சொல்பவன் தான். என்னைத் தேடி வருபவர்களுள் என்னை வியக்க வைத்த மனிதர்கள் சிலர் உண்டு. அவர்களை நான் என்றுமே மறந்ததில்லை. ஈடில்லா மெய்யறிவு கொண்ட முனிவர்கள் சிலர் என் நிழலில் இருந்து தவம் செய்திருந்த காலங்கள் உண்டு. பனை ஓலையில் எழுத்தாணி கொண்டு ஏதோ எழுதிக்கொண்டே இருப்பார்கள். அவர்கள் பேசி நான் கேட்டதாய் என் நினைவில் இல்லை. என் நினைவுத்திறனும் கொஞ்சம் மங்கத்தான் தொடங்கிவிட்டு இருக்கிறது. தொள்ளாயிரத்து தொண்ணூறொன்பது வயதாகி விட்டதே எனக்கு. அதன் காரணமாகக் கூட இருக்கலாம். வருகிற சித்திரையில் ஆயிரத்தை தொட்டு விடுவேன்.

என் நிழலில் அமர்ந்து ஆசிரியர் ஒருவர் மாணவர்களுக்கு அறம் கற்றுத் தருவார். கொஞ்சம் கோபக்காரர் தான். அவர் சொல்லித்தரும் பாடங்களைச் சரியாக கற்கவில்லை என்றால் மாணவர்களிடம் கண்டித்துப் பேசுவார். இப்படித் தான் அவரது மாணவர்களில் மூத்த மாணவனான நிதிலனைப் பார்த்து “களிமண்ணாய் இருந்துவிடாதே...!” என்று அவ்வப்போது கூறுவார். இதனால் மனம் தளர்ந்த நிதிலன் ஆசிரியரிடமிருந்து விலகிச் செல்ல முடிவு செய்தான். அவனுக்கான பாதையையும் தேர்தெடுத்துக் கொண்ட நிதிலன் ஒரு நாள் ஆசிரியரிடம் இதைப் பற்றி பேசினான். “ஆசிரியயே, நான் தொலைதூரப் பயணம் மேற்கொள்ள இருக்கிறேன். குரு ஒருவரிடம் வேதப்பாடம் கற்கப் போகிறேன். தாங்கள் அனுமதித்தால் இன்றே புறப்பட ஆயத்தமாய் உள்ளேன்,” என்றான் நிதிலன்.

“கற்றனைத்து ஊறும் அறிவல்லவா? (குறள்: 396) அதை தேடிச் சென்று கற்பதை விட சாலச் சிறந்தது உண்டோ?” என்று அகமகிழ்ந்தார் ஆசிரியர். நிதிலனின் பேச்சைக் கேட்டுக் கொண்டிருந்த மாணவர்களில் ஒருவன், “நானும் செல்கிறேன்,” என்றான். அவனைப் பார்த்து இன்னொருவன், “நானும் செல்கிறேன்,” என்றான்.

ஆசிரியரோ அவர்களை உடன் செல்ல அனுமதிக்கவில்லை. நிதிலனை மட்டும் செல்ல அனுமதித்தார். நிதலனின் மனதில் ஒரு கேள்வி மட்டும் விடாமல் எழுந்தவண்ணம் இருந்தது. அதை ஆசிரியரிடம் பேசிவிட வேண்டும் என்று எண்ணினான். அன்று வகுப்பு முடிந்தவுடன் அவரைச் சந்தித்து பேசினான்.

“இன்றே நான் உங்களிடம் பாடம் கற்கும் கடைசி நாளாக இருக்ககூடும். அதனால் ஒன்று கேட்கிறேன். குமரனையும், முகிலனையும் உங்களுடன் இருக்கச் சொன்னீர்கள். என்னை மட்டும் போக அனுமதித்தீர்கள். என்னை எப்போதும் களிமண் என்பீர்களே, அதனால்



**காஞ்சனா பக்தவத்சலம்**

தான் என்னை வெறுத்து விட்டீர்களா?” என்று நிதிலன் மனதில் உறுத்திக்கொண்டிருந்த கேள்வியைக் கேட்டான்.

“நிதிலனே, வெறுப்பில் உமிழ்ந்த வார்த்தைகள் அல்ல அவை… ஈரக் களிமண்ணை சிலையாக வடித்து விட முடியும். அவ்வாறு வடிவமைகும் திறன் கொண்ட கைகளில் நீ சேர வேண்டும் என்பது தான் என் ஆசை. ஒரு ஆசிரியரிடம் வந்து சேரும் மாணவர்கள் எல்லோரும் ஒன்றுபோல அல்ல. குமரன் காய்ந்த மண்ணைப் போல் இருக்கிறான். நீரைச் சிறுகச் சிறுக சேர்ப்பதுபோல் சரியான வழியில் பதப்படுத்த வேண்டும். முகிலனோ மணலைப் போல் இருக்கிறான்,” என்றார் ஆசிரியர். அப்படியென்றால் முகிலனால் ஒரு சிறந்த மாணவனாக விளங்க முடியாதா, என்று சிந்தித்தான் நிதிலன். அதே சிந்தனை தான் எனக்கும் வந்தது ஆசிரியர் கூறியதை நான் கெட்ட போது. நானும் கொஞ்சம் மரமண்டை தானே… அதனால் தானோ என்னவோ ஆசிரியர் கூறுவதன் பொருள் காற்றோடு கதைகள் பேசுபவன் எனக்கு விளங்கவில்லை. அவர் அதற்கு விளக்கம் அளித்த போது, “காய்ந்த மணலைக் கூட சரியான அளவில் நீர் சேர்த்து மணல் சிற்பம் செய்யும் திறன்மிகுந்த கைகளும் உண்டு.

அருவினை யென்ப உளவோ கருவியான்
காலம் அறிந்து செயின் (குறள்: 483) ”

அதன் பொருளைப் புறிந்து கொண்ட நிதிலன் மனதில் எந்த சலசலப்புமின்றி, தன்னம்பிக்கையோடு அறிவைத் தேடி கற்கச் சென்றான். அவனைக் கண்டு பெருமிதம் கொண்டார் ஆசிரியர். அவரைப் போல் நானும் அன்று பெருமிதம் அடைந்தேன்.



இடி, மின்னல், புயல், வெள்ளம் என பற்பல இயற்க்கைச் சீற்றங்களை நான் எதிர்கொண்டிருக்கிறேன். அது போல தம் வாழ்வில் பல இடையூறுகளைச் சந்தித்த மனிதர்களை நான் பார்த்திருக்கிறேன். வாழ்க்கை அவர்களுக்கு எத்தனை வலிமை தந்திருக்கிறது என்று அறிந்திருக்கிறேன். அவர்கள் கொண்ட வலிமையை நானும் சில சமயங்களில் உணர்ந்திருக்கிறேன். எனது நிழலில் தினமும் நின்று ஓயாமல் சிலம்பம் பயின்றவர்கள் சிலர் உண்டு. அவர்களுள் என்னால் மறக்க முடியாத ஒருவன் தான் பகலவன்.

மூன்று வயது குழந்தையாய் பகலவன் என்னைச் சுற்றி வந்து விளையாடிய நாட்கள் என் நினைவில் உண்டு. அவன் வளர்ந்து வருகையில் சிறுவனாய் என் கிளைகளில் ஊஞ்சலாடி மகிழ்ந்த நாட்களும் உண்டு. அப்போதெல்லாம் அவனை விட நான் அடைந்த மகிழ்ச்சி தான் அதிகம். ஆனால் கவலை இல்லாத அந்த குழந்தைப்பருவம் அவனுக்கு வெகு நாள் நீடிக்கவில்லை. தினமும் என் நிழல் தேடி வந்து என்னைச் சுற்றி ஓடி ஆடி விளையாட வருபவன் ஒரு நாள் வருவதை நிறுத்திவிட்டான். அவன் தந்தை போரில் மாய்த்த செய்தி அறிந்ததிலிருந்து அவன் போக்கே மாறிவிட்டது. எப்போதும் வில்லும், சிலம்பமும் என சண்டை பயில்வதிலேயே அவன் நாட்கள் சென்றது. அவன் சில சமயம் மனமுடைந்து என் நிழலில் அமர்ந்து அழுத நாட்களில் என் நெஞ்சமும் கூட கொஞ்சம் நெகிழ்ந்து போனதுண்டு.

பதினெட்டு வயது முழுவதுமாய் கூட நிறப்பவில்லை அவன் போருக்கு சென்ற போது. இதோ, என் அறுகில் சலசலத்து ஓடிக் கொண்டிருக்கும் இந்த ஆற்றின் கரையில் தான் அவன் விதி முடியும் என்று எழுதப்பட்டது போல் இருந்தது. அன்று அவர்கள் பாய்ச்சிய செந்நீரில் கொஞ்சம் இந்த ஆற்றோடு களந்தது போக, அதன் மீதம் என் பாதங்களையும் கழுவியது. பகைவர்களின் வஞ்சம் அழிக்க முன்நின்ற இவர்களைப் பார்க்கும் போது ஆசிரியர் முன்பு செய்த போதனை ஒன்று என் நினைவுக்கு வந்தது. “எதற்காக போரிடுகிறாய் என்பதை உணர்ந்து செயல் படுவதே நல்லது. ஒரு வீரன் தன்னைச் சார்ந்திருக்கும் மக்களைக் காக்க செய்யும் போருக்கு அவர்கள் பால் கொண்ட அன்பே அடித்தளமாக அமைந்து விடுகிறது.

அறத்திற்கே அன்புசார் பென்ப அறியார்
மறத்திற்கும் அஃதே துணை (குறள்: 76) ”

ஒரு சில நூற்றாண்டுகள் கடந்தது. என்னை வியக்கவைத்த, நெகிழவைத்த நிகழ்வுகள் எத்தனையோ கடந்தபின் இனியும் நான் பார்க்கவும், வியக்கவும்

ஏதுமில்லை என நான் எண்ணிய போது ஒரு சிலர் வந்தார்கள். இதுவரை நான் பார்த்தவர்களில் இவர்கள் சற்று வித்தியாசமானவர்கள். எத்தனை எத்தனை அடக்குமுறையும், ஆதிக்கமும் தம்மை நோக்கி வந்த போதும் சிறிதும் சலசலப்பின்றி அமைதி காப்பார்கள். அகழ்வாரைத் தாங்கும் நிலம் போல (குறள்: 151) நின்றவர்கள் இவர்கள். ஆனால் இவர் பட்ட துன்பத்தைக் கண்டு அந்த நிலமும், கடலும் கூட கொஞ்சம் கண்ணீர் சித்தியிருக்கும். தம் மக்கள் சுதந்திரக் காற்றை சுவாசிக்க வேண்டும் என்ற உறுதி கொண்டு நின்றவர்கள்.

ஒறுத்தார்க்கு ஒருநாளை இன்பம் பொறுத்தார்க்குப்
பொன்றுந் துணையும் புகழ் (குறள்: 156)

என்பது போல் தம் புகழை உலகறியச் செய்து, எடுத்துக்கொண்ட முயற்சியில் வெற்றியும் கண்டவர்கள். ஒறுத்தாரை ஒறுத்தல் வீரமென்றால் அதை விட மிகச் சிறந்த வீரம் பொறுப்பதில் உள்ளது என்று இவர்களிடம் நான் கற்றுக் கொண்டேன்.

யுகம் யுகமாய் தவம் செய்து சாகாவரம் பெற்றவன் போல் நிற்பவன் என்று சொல்லிக் கொள்வேன். ஆனால் நான் அதுவல்ல என்பதை நன்கறிவேன். மழை, வெய்யில், குளிர் என பல பருவ மாற்றங்களை பழகிக் கொண்டவன் நான். மனிதர்கள் அடையும் மாற்றங்களை மட்டும் புறிந்துகொள்ள முடியாதவனாய் இருக்கிறேன். என் வேர்களும் கொஞ்சம் கொஞ்சமாய் வலுவிழந்து கொண்டிருக்கின்றன. என் கிளைகளும் முன்பு போல் இளக்கமானதாய் இருப்பதில்லை. நான் பொளிவிழந்து பட்டுப் போகும் நாள் வெகு தூரத்தில் இல்லை என்றபோதும் அதைப் பற்றி நான் கவலைப் படவில்லை. நான் காத்திருக்கிறேன்...

கேடில் விழுச்செல்வம் கல்வி (குறள்: 400) அதனை முனைப்போடு கற்றிடும் இந்நூற்றாண்டுன் பிள்ளைகள இவர்கள் அறை தனில் ஒளி கடத்தும் சாலரமாய் நான் மாறக் காத்திருக்கிறேன். தொலைக்காட்சி, நிழல்பட விளையாட்டு என்று சொகுசு வாழ்க்கைக்கு பழகிவிட்டு என் நிழல் தேடி வந்து விளையாட நேரமில்லாமல் போன இவர்களைத் தேடி வந்து இவர்கள் வீட்டைத் தாங்கி நிற்கும் துண்களாய் நான் மாறக் காத்திருக்கிறேன். நுண்ணறிபேசியாய், வரைப்பட்டிகையாய், கணினியாய் கைக்கெட்டும் தூரத்தில் உலக அறிவை வைத்துக் கொண்டு அறிவுடையார் எல்லா முடையார் (குறள்: 430) என்பது போல் இவர்கள் அனைத்தும் கற்றுச் சிறக்க இவர்கள் அறை தனில் மேசையாய், நாற்காலியாய் நான் மாறக் காத்திருக்கிறேன். அன்று குழந்தைப்பருவம் முழுமையாய் நிறைவடையாமல் போனவர்களுக்கும் சேர்த்து இன்று இவர்கள் மகிழ்ந்து ஆடிட இவர்கள் வீட்டில் ஊஞ்சல் மரமாய் நான் மாறக் காத்திருக்கிறேன். யுகம் யுகமாய் தவம் செய்து சாகாவரம் பெற்றவன் போல் பன்னூற்றாண்டு கடந்து தொண்ணூறு அடி தொட்டு நிற்கும் விருட்சம் நான் காத்திருக்கிறேன்... தீர்க்கமாய்... சாந்தமாய்... நிறைவாய்...!

தமிழால் இணைந்தோம்! நன்றி!



# தேநீர்க் குவளை என்னும் நண்பன்


**லாரன்ஸ் செல்வம்**
(புளியங்குடி)
ரோட்ஐலேண்ட் தமிழ்ச்சங்கம்.


ஒவ்வொரு முறை பருகும் போதும்
சொல்லப்படாத பல கதைகளும்
சேர்ந்து விழுங்கப் படும்!!!
நம்மையறியா ஒரு புத்துணர்வு
மாயையா என்று தெரியவில்லை-
ஆனால்
மதி மயங்கிக் கிடக்கிறது
இந்த தேநீரில்!!
சுட்டெரிக்கும் வெயிலிலும்
நடுநடுங்கும் குளிரிலும்
உற்ற நண்பன்-இந்த
ஒரு குவளைத் தேநீர்!!!
உறிஞ்சும் போதேல்லாம்
உள்ளாற இணைந்து விடுகிறான்
சொல்லாமலே!!!






# உலக மகளிர் நாள்

மினசோட்டாத் தமிழ்ச் சங்கம் உலக மகளிர் நாளை இந்த ஆண்டு மார்ச் எட்டாம் தேதி மிக சிறப்பாகக் கொண்டாடியது.

மினசோட்டாத் தமிழ்ச் சங்கத் தலைவர் திரு. செந்தில்குமார் கலியபெருமாள் அவர்களின் வரவேற்புரையுடன் துவங்கிய விழாவில் மகளிரை உற்சாகப்படுத்தும் உரையாடல்கள் வரிசைப்படுத்தப் பட்டிருந்தன.

முதலில் கவிப்பேரொளி திரு நீரை அத்திப்பூ அவர்களின் மகளிர் நாள் வாழ்த்துரை ஒளியிடப்பட்டது. பின்பு மினசோட்டாவில் பல ஆண்டுகளாக வீணை இசையை பலருக்கும் கற்றுக் கொடுத்து வரும் கலைமாமணி திருமதி நிர்மலா ராஜசேகர் அவர்கள், “நல்லதோர் வீணை செய்தே - மினசோட்டா மண்ணில் இசைப்பயணம்” என்ற தலைப்பில், இந்த மினசோட்டா மண்ணில் ஒரு பெண்ணாக தான் இசைத் துறைக்கு ஆற்றி வரும் கலைப் பணிகளை மிக அருமையாக ஊக்குவிக்கும் வகையில் எடுத்துரைத்தார். மேலும் மீசைக்கவியின் வரிகளில், எம் எஸ் சுப்புலட்சுமி அம்மா அவர்களின் இசையில்

“நெஞ்சுக்கு நீதியும் தோளுக்கு வாளும்
நிறைந்த சுடர்மணிப்பூண்
பஞ்சுக்கு நேர்பல துன்பங்க ளாம் இவள்
பார்வைக்கு நேர்பெருந்தீ”

என்று தன் குரலில் இவர் பாடியது கேட்டோரை உணர்ச்சிப் பெருக்கில் ஆழ்த்தியது.

அடுத்ததாக மருத்துவர் திருமதி அஸ்வினி ஆறுமுகம் அவர்கள் மருத்துவத்துறையில் மினசோட்டாவில் பெண்களின் பங்களிப்பு, பெண்களின் சாதனை, பெண்கள் எதிர்கொள்ளும் சவால்கள், என்ற தலைப்பில் அனைவருக்கும் உற்சாகமூட்டும் ஒரு உரையைத் தந்தார்.

பிறகு “வாழ்க்கை அற்புதமானது - புற்றுநோய் விழிப்புணர்வு” என்ற தலைப்பில், தொழில்துறையில் மேலாளராக இருக்கும் திருமதி மல்லிகார்ஜுனன் அவர்கள் உரையாற்றினார். பெண்கள் தங்களின் உடல்நலத்தை எவ்வாறு கவனித்துக் கொள்ள வேண்டும் என்றும் நம் முன் இருக்கும் சவால்களை எப்படி எதிர்கொள்ள வேண்டும் என்றும் தனக்கு நடந்த அனுபவத்தின் மூலம் ஒரு விழிப்புணர்வு உரையாக அளித்திருந்தார்.

அடுத்ததாக திரு முருகையன் சுப்பிரமணியன் அவர்கள் எதிர்பாராத விதமாக குடும்பத்தில் ஏதேனும்







ஒரு அசம்பாவிதமோ உயிரிழப்போ ஏற்பட்டால் அமெரிக்கா போன்ற நாடுகளில் உயில் எழுதி வைப்பது எவ்வளவு முக்கியம் என்பதனை விளக்கும் வகையில் உரையாற்றினார்.

அடுத்ததாக இதுசார்ந்த துறையில் பணிபுரியும் திருமதி சுபா ராம் அவர்கள் உயில் எழுதுவது அல்லது இன்சூரன்ஸ் எடுப்பது பற்றிய வழிமுறைகளை விளக்கினார்.

அடுத்ததாக கல்லூரியில் முதலாமாண்டு படித்துக் கொண்டிருக்கும் மாணவி செல்வி ஜெய தபஷ்வினி மணிகண்டன் அவர்கள் தொடர் நீச்சல் பயிற்சி எடுத்து மாநில அளவிலான போட்டிகளிலும் அமெரிக்காவின் பல நீச்சல் போட்டிகளிலும் கலந்துகொண்டு பரிசுகள் பெற்றிருக்கிறார். அவர் தன் கல்லூரி படிப்பினிடையில் இந்த நீச்சல் போட்டிகளில் எப்படிக் கலந்து கொள்கிறார் அதில் உள்ள சவால்கள், சாத்தியக்கூறுகள், உடல் நலன் மற்றும் வலிமை பேணுதல் என்பவை பற்றி மிக அருமையாக தன் தெள்ளு தமிழில் பேசியது அனைவரையும் வியப்பில் ஆழ்த்தியது. இவர் மினசோட்டாத் தமிழ்ச்சங்க தமிழ்ப் பள்ளியின் முன்னாள் மாணவர் என்பது குறிப்பிடத்தக்கது.

அடுத்தபடியாக தனது பத்தாவது வயதில் டேபிள் டென்னிஸ் ஆடத் தொடங்கிய செல்வி ஆர்த்தி லோகநாதன் அவர்கள் விளையாட்டுத்துறையில் தான் சாதித்ததைப் பகிர்ந்து கொண்டார். மினசோட்டாவில் இவர் இரண்டு வருட பயிற்சியிலேயே மாநில அளவில் விளையாடும் வீராங்கனையாகத் தேர்வு செய்யப்பட்டார் பின்பு மினசோட்டாவில் மிக சிறு வயதில் மாநில அளவு வெற்றியைப் பெற்ற முதல் பெண்மணி என்ற பட்டத்தையும் பெற்றார். இது நிகழ்ச்சியில் கலந்து கொண்ட பல இளைஞர்களுக்கு ஊக்குவிக்கும் விதமாக அமைந்தது.

அடுத்தபடியாக திருமதி கரோலினா ராயர் அவர்கள் தொழில்துறையில் உயர் பதவிகளில் பெண்களின் ஆளுமை பற்றியும் அதனை அடையும் வழிமுறைகள் பற்றியும் சுவாரசியமாக எடுத்துரைத்தார்.

பிறகு மினசோட்டா பல்கலைக்கழகத்தில் மேற்படிப்பினை படித்து வரும் மாணவர்கள் திரு ஜிசெல், திருமதி நீலினா நந்தகுமாரன், செல்வி தீப்தி கண்ணன், செல்வி வைஷ்ணவி வெங்கடசுப்பிரமணியன் ஆகியோர் பல வாய்ப்புகள் பற்றிப் பேசினர். ஜிசெல் தன் 72பிஎம் என்கிற நிறுவனத்தில் பெண்களுடைய பங்களிப்பினைப் பற்றி மிக அருமையாக பேசினார்.

அடுத்தபடியாக மினசோட்டா பல்கலைக்கழக தமிழ் மாணவர்கள் செல்வி ஸ்ரேயா உதய பிரகாஷ், செல்வி ரோஷினி செந்தில் ஆகியோர் தமிழ் மாணவர்களை இணைத்து, தமிழ் ஸ்டுடெண்ட்ஸ் ஆர்கனைசேஷன் (Tamil student Organization) என்கிற அமைப்பைத் தொடங்கி, முறையாக அதனை பல்கலைக்கழகத்தில் பதிவு செய்து, பல தமிழ் விழாக்களை நடத்தி வரும் செய்தியைப் பகிர்ந்து கொண்டார்கள்.

மகளிர் விழா உற்சாகமாகவும் ஊக்குவிக்கும் விதமாகவும் அமைந்தது சிறப்பு.

**திரு செந்தில்குமார் கலியபெருமாள்**

**திருமதி பிரியா கிருஷ்ணன்**












# வாசிக்கலாம் வாங்க ஓராண்டு நிறைவு விழா

## திருமதி பிரியா கிருஷ்ணன்

வாசிக்கும் பழக்கத்தை ஊக்குவிக்கவும், சிறந்த படைப்புகளை அடையாளம் காணவும், மினசோட்டாத் தமிழ்ச் சங்கம் எடுத்த முன்னெடுப்புதான், "வாசிக்கலாம் வாங்க" என்னும் நிகழ்வு. 'உலக புத்தக நாள்' ஒவ்வொரு வருடமும் ஏப்ரல் மாதம் 23ஆம் நாள் கொண்டாடப்படுகிறது. கடந்த ஆண்டு 2024 ஏப்ரல் மாதம், 23ஆம் திகதியில் நமது முதல் "வாசிக்கலாம் வாங்க" கூட்டம் தொடங்கப்பட்டு, ஒவ்வொரு மாதமும் தொடர்ந்து நிகழ்ந்து வருகிறது. நமது சங்கத்தில் இதுவரை வெற்றிகரமாக ஒன்பது கூட்டங்கள் நடத்தியுள்ளோம்.

இந்த வாசிக்கலாம் வாங்க நிகழ்வினை தொடங்கி இந்த ஆண்டு 2025 ஏப்ரல் மாதம் ஓராண்டினை நிறைவு செய்த பெருமையினை மினசோட்டாத் தமிழ்ச் சங்கம் ஓராண்டு நிறைவு விழா என்று மே மாதம் 4ஆம் திகதி சிறப்பாக கொண்டாடுயது.

நாம் எதற்காக இந்த வாசிக்கலாம் வாங்க என்கிற ஒரு முயற்சியை ஆரம்பித்தோமோ, அந்த முயற்சி வெற்றிகரமாக மக்களை சென்று அடைந்துள்ளது என்கிற பெருமகிழ்ச்சியை இவ்விழா நமக்கு அளித்தது.

இதனை தொடர்ந்து ஒருங்கிணைத்து வரும் திருமதி பிரியா கிருஷ்னன், மற்றும் வாசிக்கலாம் வாங்க குழுவினர் சிறப்பாக ஒருகினைத்து அனைவரின் நன்றிகளையும் பாராட்டுக்களையும் பெற்றனர் .

நம்முடைய இந்த முயற்சியினை ஊக்குவிக்கும் விதமாக தொடர்ந்து நமக்கு ஆதரவு அளித்து வரும் நமது விருந்தினர்கள் அனைவருக்கும் நன்றியோடு விழா தொடங்கியது. விழாவில் பங்கு கொண்டு நம்மை பாராட்டி வாழ்த்தினை தெரிவித்த நமது விருந்தினர்கள் கவிப்பேரொளி திரு. நீரை அத்திப்பூ ஐயா , முனைவர் தமிழ்ச்செல்வி , எழுத்தாளர் திரு காண்டீபன் இராசையா அனைவரும் பாராட்டுக்குறியவர்கள்.

வாசிக்கும் திறனில் ஆர்வம் கொண்டுள்ள நம் வாசகர்கள் சிலர் இன்று அவர்களின் உரையை ஆற்றிய விதம் நம் அனைவரின் மனதையும் ஆட்கொண்டது

எழுத்தாளர் திரு ஜெயகாந்தன் பற்றி பேசிய திருமதி கிருத்திகா மணியரசு, எழுத்தாளர் கல்கியை பற்றி திருமதி ஜோஷித்தா ஜோக்கிம் இருவரும் செவ்வனே படைப்புகளையும் படைப்பின் தன்மைகளை பற்றி எடுத்துக் கூறியது அனைவரையும் கவர்ந்தது.

சிறுவர்கள், செல்வன் துமிலன், வேள்பாரி கதையை எடுத்துக் கூறிய விதமும், கமலேஷ் தெனாலிராமன் கதைகள் பற்றி எடுத்துக் கூறிய விதமும், நித்தின் விவேகானந்தரை பற்றி கூறிய விதமும் நம் வாசிக்கலாம் வாங்க நிகழ்வு இளையோர் இடத்திலும் எவ்வளவு ஆவலை தூண்டி இருக்கிறது என்பதனை உறுதிப்படுத்தியது.

மேலும் நம் வாசிக்கலாம் வாங்க குழுவில் இருந்து திருமதி பிரியா அவர்கள் வாசித்தலின் பயன்களைப் பற்றியும், செந்தில்குமார் நமக்கு கிடைக்கும் நேரங்களில் சங்க இலக்கியங்களை படித்தல் எவ்வளவு அவசியம் என்பதை பற்றியும், நம் பண்பாட்டு அசைவுகள் என்ற தலைப்பில் தொ பரமசிவம் அவர்களை பற்றி சுந்தரமூர்த்தி

அவர்கள் பேசியதும், கவிதை வாசித்தல் எவ்வளவு ஆனந்தத்தையும் ஆழ்ந்த சிந்தனையையும் வளர்க்கக்கூடியது என்ற தலைப்பில் திருமதி ரேவதி அவர்களும், இன்றைய காலகட்டத்தில் தொழில்நுட்பம் வாசித்தலுக்கு எந்த அளவுக்கு கை கொடுக்கிறது என்பதை பற்றி திரு சரவணன் அவர்கள் பேசியதும் மிக அருமையான ஒரு கலந்துரையாடலாக அமைந்தது.

இத்துடன் சேர்த்து நம் பாரம்பரிய முறைப்படி வாழை இலையில் சைவ விருந்தும் அசைவிருந்தும் கோலாகலமாக பல வகையான உணவு வகைகளைக் கொண்டு மிகச் சிறப்பாக நடைபெற்றது. அத்துனை உணவு வகைகளையும் சுவையுடன் பரிமார நம் சங்க செயலாளர் திரு மணிகண்டன் ஜயராமன் அவர்கள் சிறப்பாக ஒருங்கினைத்தார்.

மொத்தத்தில் நம் வாசிக்கலாம் வாங்க விழா ஓர் ஆண்டு கடந்து இன்னும் பல ஆண்டுகள் பல சாதனையை கடக்க இருக்கிறது, மினசோட்டா மண்ணில் வாசிக்கும் திறனை நிச்சயம் நம் மக்களின் இடையே பரப்ப செய்யும் என்பதில் எள்ளளவும் சந்தேகம் இல்லை. நிறைவான ஒரு விழாவை நடத்திய இன்பத்தோடு அனைவரும் வாழை இலை விருந்தினை உண்டு களித்தோம்.

# உலகத் தாய்மொழி நாள் மற்றும் தமிழ்த் திருவிழா

**திருமதி ரேவதி ராஜு**

ஒவ்வொரு வருடமும் மினசோட்டா தமிழ்ச் சங்கமும் மினசோட்டா தமிழ்ச் சங்க பள்ளியும் இணைந்து உலக தாய்மொழி நாளை 'தமிழ் திருவிழா' என்று மிக சிறப்பாகக் கொண்டாடி வருகிறது. இந்த ஆண்டு பிப்ரவரி 22ஆம் நாள் பிரமிப்பூட்டும் விதமாக நடைபெற்றது. ஒவ்வொரு மாணவரும் ஒரு தலைப்பை எடுத்துக்கொண்டு அதை ஒட்டிய ஒரு திட்டத்தையோ அல்லது பதாகையோ தயார் செய்து அதனை காட்சிப்படுத்தி, காண்போருக்கு விளக்கினர்.

பெற்றோர்கள் ஆசிரியர்கள் என அனைவரும் அதனைக் கண்டு ரசித்தனர். இதற்கு சில சிறப்பு பரிசுகளும் அளிக்கப்பட்டன.

இதன் அடுத்த நிகழ்வாக சிறுவர்களுக்கான பேச்சுப்போட்டி அரங்கம் அதிர எதிரொலித்தது. மாணவர்களின் தெளிவான கருத்துகளும், தேர்ந்த பேச்சாளர்கள் போல அவர்கள் பேசிய விதமும் அனைவரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தியது மட்டுமல்லாமல் நடுவர்களுக்கு வெற்றியாளர்களைத் தேர்ந்தெடுக்க மிகப் பெரிய சவாலாக அமைந்தது.

அதுபோல பெரியவர்களுக்கான கவிதை, கட்டுரைப் போட்டிகள் நடத்தி பரிசுகளும் வழங்கப்பட்டன. அதற்கு நடுவர்களாக எழுத்தாளர் திரு. நீரை அத்திப்பூ அவர்களும், எழுத்தாளர் பழமைபேசி அவர்களும், முனைவர் மல்லிகார்ஜுனன் அவர்களும், திரு சிவக்குமார் கணேசன் அவர்களும் திரு சரவணகுமரன் காசிலிங்கம் அவர்களும் இருந்து, மிக நேர்த்தியாக வந்திருந்த அனைத்து படைப்புகளையும் பொறுமையாக வாசித்து அதனை ஆய்வு செய்து அதற்கு மதிப்பீட்டு எங்களுக்கு வெற்றியாளர்களைத் தேர்வு செய்வதற்கு உதவினார்கள் . அனைத்துமே தேர்ந்து சிறந்த படைப்புகளாக ரசிக்கும்படி இருந்ததாக நடுவர்கள் பராட்டினர். அதனை நம் சங்கத்தைச் சார்ந்த திருமதி ரேவதி ராஜு மற்றும் திருமதி பிரியா கிருஷ்ணன் மற்றும் குழுவினர்கள் ஒருங்கிணைத்து உலகத் தாய்மொழி நாள் கொண்டாட்டத்தன்று வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகளும் வழங்கப்பட்டது.

மாணவர்களின் காட்சித்திட்டங்களில் துவங்கி, பரிசுகள் வரை இந்த முழுநாள் நிகழ்வு மிகவும் சிறந்த தமிழ் உணர்வு நிறைந்த நாளாக அமைந்தது.



மிச்சிகன் தமிழ்ச் சங்கம்
MICHIGAN TAMIL SANGAM
தமிழால் ஒன்றிணைவோம்... செயலால் வென்றிடுவோம்...
Kyyba and DEP
வழங்கும்
பொன்விழாக் கொண்டாட்டம் 2025
வட அமெரிக்கத் திருக்குறள் மாநாடு
NORTH AMERICA TIRUKKURAL CONFERENCE
Tamil Scholars from Across North America
ஜூலை 19 & 20 - 2025
(சனி & ஞாயிறு)
Venue: Bloomfield hills High School
4200 Andover Road, Bloomfield Hills, MI 48302
திருக்குறள்
ஆராய்ச்சிக் கட்டுரைகள் வெளியீடு
தலைவாழை இலை விருந்து
கலை நிகழ்ச்சிகள்
சிறப்பு நிகழ்ச்சிகள்
விவாத அரங்கம்
திரைப்பட இசையமைப்பாளர்
D இமான்
குழுவினரின் இன்னிசை நிகழ்ச்சி
Contacts / தொடர்புக்கு
For Events:
Rajakumari Rajan (802 373-9719)
Kirikujalambal (248 565-5628)
For Stalls/Vendors:
Karthikeyan Krishnaraj (248 961-7792)
Mirunalini Senthilraja (248 237-5379)

